குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

மலர் 19] சார்வரி ஆண்டு ஆவணித்திங்கள் 10—9—60 [இதழ் 1



உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

ஆசிரியர் :-

வித்துவான். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

துணை ஆசிரியர் :-

வித்துவான். முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

உட்பொருள்

		பக்கம்
1.	சிவ ஞான போதம் ...	537
2.	பூமாரி சொரிதல் ...	545
3.	ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாசி ...	552
4.	திரு. அ. சீனிவாசராகவன் M. A., அவர்களின் சொற்பொழிவுச் சுருக்கம் ...	559
5.	வள்ளுவன் வழி ...	564
6.	சேல்வம் ...	567
7.	தருமையாதீன வெளியீடுகள் ...	569
8.	சிற்றிங்கணுடையான் ...	576
9.	புதுமைக்கு... ...	580
10.	உடல் வளர்க்கும் மூலிகைகள் ...	586
11.	சவுந்தரியந்தாதி ...	590
12.	செய்திகள் ...	592
13.	எதிர்காலம் ...	598

அட்டைப்பட விளக்கம்

தருமையாதீனம் ஆவணிமூலத் திருநாளில் (31—8—1960) - திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி முதல்வர், பேராசிரியர் திரு. அ. சீனிவாசராகவன் M. A. அவர்களுக்குச் "செந்தமிழ்ச் செம்மல்" என்ற பட்டம் வழங்கி பொன்னுடை போர்த்து ஆசி அருளல்.

வ

வாழ்க உலகெலாம்

ஞானசம்பந்தம்

[தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 19 } சார்வரி - ஆவணி 10—9—69 { இதழ் 10

வ

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலி!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

சிவ ஞான போதம்

[கட்டுரை 20]

(மலர் 19, இதழ் 9, பக்கம் 479 இன் தொடர்பு)

சூத்திரம் 2; அதிகரணம் 8; வெண்பா 1.

" கண்ட நனவைக் கனவுணர்வின் தானறந்து
விண்படர்ந்தத் தூடு விணியிலுல—கண்சேவிகேட்
டுள்ளதே தோற்ற வுளம்அணுவாய்ச் சென்று மனம்
தள்ள விழும்கருவில் தான் "

" என்பது உதாரணம் என்றுதலிற்றே எனின் புனருற்பவம் ஆங்காற்படும் இயல்புகள் உணர்த்தி அதனை (அப்புனருற் பவத்தை) வலியுறுத்துதல் நுதலிற்று ".

'கண்செவி கேட்டு உள்ளதே தோற்ற உளம் அத் தூடு விண்படர்ந்து கண்டநனவைக் கனவுணர்வின் மறந்து மனம் தள்ள வினையிலுல் அணுவாய்ச் சென்று கருவில் விழும்' (சிற்றுரை).

'கண்செவி கேட்டு உள்ளதே தோற்ற உளம் அத்தூடு விண்படர்ந்து வினையிலுல் மனம் தள்ளக் கண்டநனவைக் கனவுணர்வின் தான் மறந்து அணுவாய்ச் சென்று கரு விழும்தான்' (பேருரை).

இவ்விருரையிலும் சொல்வகை செய்தமை வேறுபடுதலை அறிக. இன்னோரன்ன பல அவற்றில் உள. அவற்றைக் குறித்த ஆராய்ச்சிக்கு இஃது இடம் அன்று.

இவ்வெண்பாவின் பொருளால் அறியப்படுவன :-

1 கண்ணும் செவியும் முதலிய உறுப்புக்களை யுடையது இப் பாருடல் (தூலதேகம்).

2 இப் பாருடல் கேட்டவழியும் கெடாது நிலைபெறுவது நுண்ணுடல் (சூக்கும தேகம்; புரியட்ட தேகம்).

3 படைப்புக் காலந்தொடங்கிச் சங்காரகாலம் அளவும் தனக்குக் கேடு இன்றி நிலைபெறுதலை நுண்ணுடற்குள்ள நிலைபேறு.

4 அது பூதசார சரீரம் முதலியனவாய்க் காரியம் உறும்.

5 உயிர் அப் பூதசார சரீரம் முதலியவற்றில் போகுந்தும்.

6 தேவலோகத்திலோ நரகலோகத்திலோ சென்று வினைப்பயனைத் துய்த்து மண்ணுலகிற்கு மீளும் உயிர்க்குப் பூதசார சரீரம் முதலியன இன்றியமையாதன.

7 புரியட்ட தேகம் மண்ணுலகிற்குரிய பூதசார சரீரம் ஆகிய தூலதேகமாயும் விண்ணுலகிற் சுகாநுபவத் திற்கு உரிய தேவசரீரமாயும் நரகிலே துக்காநுபவத்திற்கு

உரிய நரகசரீரமாயும் செயற்படும் (எண் 4 இல் இங்குக் குறித்திருக்கிறேன்). அவ்வின்னிலும் நரகிலும் பயனுகும் தேகம் 'யாதனுசரீரம்' எனப்படும். அது 'பெருந் துன்பவுடல்' என்னும் பொருளுணர்த்துவது. பொன் விலங்கும் இரும்பு விலங்கும் போன்ற இருவினையும் இருன் சேர்ந்தனவே ஆதலின், அவ்விரண்டும் 'யாதனு சரீரம்' என்று கொண்டனர் அருள் நூலோர்.

8 நனவிற் கண்டவற்றைக் கனுக்காணும்போது அறிவு மறந்து வேறுபடும். (இஃது உவமையாய் நின்றது இவ்வேண்பாவில்)

9 இங்கு முதல் 4 என்னுடையவற்றில் அறிந்த மூன்றும் மறக்கப்படுதலும் வேறுபடுதலும் ஆகிய இன்னேரன்னவை அறிவுக்கு உள்ளன. அம் மூன்றுவன :-

(அ) கண் செவி முதலியன உடைய தூலதேகம் கெடுதல்.

(ஆ) அது கெட்டவழி, சூக்கும தேகம் பூதாசார சரீரமாகிய தேவ சரீரமாகவும் நரக சரீரமாகவும் ஐம்பெரும் பூதமயம் ஆகிய தூலதேகமாகவும் செயற்படும். அம்மூன்றுடலுள் வீண்ணிற்கு உரியதை ஏற்று வின்படர்தல். நரகிற்கு உரியதை ஏற்று நரகடைதல்.

(இ) விண்ணிலே இன்பம் நுகர்தலும் நரகிலே துன்பம் நுகர்தலும் ஆகிய இன்னேரன்னவை இவற்றை மறந்து அறிவேறுபடுதல் (இவ்வேண்பாவில் உவமேயமாக நின்றது.)

10 முன்னுடம்பு இறக்குங்கால் அடைந்த வினையானது ஒரு கதி (நெறி)யை உயிர்க்குக் காட்டும்.

11 முன்னுடம்பு இறக்குங்கால் மனம் ஏதேனும் ஒன்றிற் சென்று பற்றும்.

12 மனம் யாண்டுச்சென்று பற்றும் ? ஆண்டு உயிர் மீள வந்து பிறக்கும்.

"மரிக்கும்போ துன்னும் வடிவினை ஆவி
பரிக்கும் நினைவு பரித்து"

13 மனம் செலுத்தலால் அக்கதியில் செல்லற்கு ஏதுவாய் எஞ்சிநின்ற புண்ணிய பாவ சேடத்தால் சூக்கும தேகமாத்திரமாய்ச் செல்லும். அம் மனம் தள்ளிய கதிக்குத் தக்கவாறு கரு அமையும்.

14 அக்கதிக்கு அமைந்த அக் கருவில் உயிர் போருந்தும் (இது புனருற்பவம்).

ஆசிரியர் சிவஞான சுவாமிகள் எழுதியருளிய பொருள்

"கண் செவி முதலிய உறுப்புக்களையுடைய இவ்வுடம்பு கேட்டவழித் தனக்குக் கேடின்றிப் படைப்புக் காலந் தோடங்கிச் சங்கார காலமளவும் நிலைபேற்று உள்ளதாகிய சூக்கும தேகம் பூதசாரவுடம்பு முதலியனவாய்க் காரியப்பட, உயிரானது அப்பூதசார முதலிய உடம்பின்கண் பொருந்தித் துறக்க நிரயங்களில் சென்று அநுபவித்துப், பின்னர் நனவின்கண் கண்டவற்றைக் கனாக்காணுங்காலத்து மறந்து அறிவு வேறுபட்டாற்போல, முன்னைக் கண் செவி கேட்டவாறும் உள்ளதே தோற்ற அத்தூடு விண்படர்ந்த வாறும் ஆண்டு அநுபவித்தவாறும் ஆகிய இன்னோரன்ன வற்றை மறந்து அறிவு வேறுபட்டு, முன்னுடம்பு இறக்குங் கால் அடுத்த வினைகாட்டும் கதிநிமித்தம்பற்றி உயிர் அவாவு மாறு மனம் செலுத்துதலான் அக் கதிக்கண் சேறற்கு ஏது வாய் எஞ்சிநின்ற புண்ணிய பாவ சேடத்தால், சூக்கும தேக மாத்திரையாய்ச் சென்று அம் மனம் தள்ளிய கதிக்கு அமைந்த அக் கருவின்கண் படும்".

1 உடம்பு நீங்கிப் போங்கால் முதலிற் கெடுவன கண்ணும் செவியும் ஆதலால், கண் செவி முதலிய உறுப்புக் களையுடைய உடம்பினைக் கண் செவி என்று உபசரித்தார்.

2 கேட்டவழி என்பது (வேண்பாவில்) கேட்டு எனத் திரிந்து நின்றது.

3 உள்ளது - தூலவுடம்புகள் கேட்டவழியும் தனக்குக் கேடு இன்றிப் படைப்புக்காலந்தோட்டுச் சங்கார காலமளவும் நிலைபேற்றுளதாகிய புரியட்டகம்ஆகிய தேகம். தோன்றுதல்- பூதசாரவுடம்பு முதலியனவாய்க் காரியப்படுதல்.

ஏகாரம் தேற்றம். ஐம்பெரும் பூதத்தின் காரியமாகிய தூலவுடம்பு சூக்கும தேகத்தின் காரியம் ஆமாறு என்னை? இஃது ஐயம். இவ்வையம் நீக்குதற்கு 'உள்ளதே தோற்ற' எனத் தேற்ற ஏகாரம் கொடுத்தோதினர் (வேண்பாவில்).

உள்ளது தோற்ற என்பதனால் இல்லது தோன்றுது என்னும் சற்காரியவாதத்திற்கு இழுக்கில்லாமையும் துறக்க நிரயங்களில் சென்றுமீளுதற்குப் பற்றுக்கோடு உள்ளமையும் உணர்த்தினர். அவ்வாற்றால் அவைபற்றி நிகழும் ஆசங் கையை நீக்கியவாறு காண்க.

'உள்ளதே தோற்ற' என்றதனால் உடல்வேறுபடுமாறும் 'வீண்படர்ந்து[1] என்றதனால் இடம் வேறுபடுமாறும், 'கண்டநனவைக் கனவுணர்வின் தான் மறந்து' என்றத னால் அறிவு வேறுபடுமாறும் உணர்த்தியவாறும்.

ஆகாயம் முதலிய தூலபூதங்கள் சூக்கும பூதமாகிய தன் மாத்திரைகளின் காரியம் ஆகலின், அவற்றால் ஆகிய தூலதேகம் தன் சாதியாகிய அச் சூக்கும தேகத்தின் காரிய மாதற்கு இழுக்கில்லை.

இன்னும் முதல் உற்பவத்தில் சூக்கும தேகம் முதலிற் படைத்துப், பின் அது காரணமாக வரும் இருவினையால் பல வேறுவகைப்பட்ட தூலதேகம் படைக்கப்பட்டன ஆகலானும் சூக்கும தேகத்தின் காரியமாதல் பற்றியே தூலதேகம் ஐம்பெரும் பூதமயம் எனப்பட்டது என்க.

1 'பூதஞ சரீரம் போனுல் புரியட்ட ரூபம் தானே யாதஞ சரீரம் ஆகி' எனவும்,

2 'சூக்கும வுருவ் தென்னில் தூலகாரணமதாகும்' எனவும்,

3 'தூலமாம் உருவினுக்குச் சூக்குமம்முதல்' எனவும்,

4 'மாறியிவ் வுருவம்எல்லாம் வருவதெங்கே நின் றேன்னிற் கூறிய சூக்குமத்தாம்' எனவும்,

5 'விதிப்படி சூக்குமத்தே யுருவரும்' எனவும் வழி நூலாசிரியர் கூறியவாறும் காண்க.

இவ்வுண்மை உணரமாட்டாதார் ஐம்பெரும் பூதத்தால் ஆகிய தூலவுடம்பு சூக்கும தேகத்தின் காரியம் ஆமாறு என்னை என்று ஆசங்கை செய்து, 'புரியட்ட ரூபந்தானே யாதஞசரீரம் ஆகி' என்பது முதலியன பிறர் மதம்பற்றிக் கூறியனவாம் என்று உரைப்பர். பல இடத்தும் அவ்வாறே ஓதுவதால் அங்கனம் உரைத்தல் பொருந்தாமை அறிக.

சூக்கும தேகமே அமையும்; தூலதேகம் மிகையே ஆம் எனின் தூலபோகம் நுகர்தற்குத் தூலதேகம் ஒரு தலையான் வேண்டப்படும் ஆகலான் அது மிகையே ஆகாது. இங்கனம் ஆகவே ஒரு தன்மையதாகிய சூக்கும தேகத்தில் தூலதேகம் அச்சுமாறித் தோன்றுதல், 'வேறொரு குறியாம் ஆரம் வீரசங்கிலியும் ஆதல்' போலஆகும்.

சூக்கும தேகம் கெடாமல் நிற்கத் தூலதேகம் கெட்டுத் தோன்றுதல், 'காலம் முற்றும் நீக்கிட மரம் பின் வேர் ஒன் நீள்மரம் நிகழ்த்துமாபோலவும், மதிக் கெழுகலைகள் வரூவன போவனபோலவும் ஆம்' என்று உணர்ந்துகோள்க. இவை யெல்லாம் சிவஞானசித்தியில் விரித்தலின், ஆண்டுக் காண்க.

'பூதனு' என்பது பிழை என்றும் 'பூதந' என்று கோண்டு பூமியிலிருக்கும் உடம்பு எனப் பொருந்தக் கூறலாம் என்றும் வடமொழிப் புலவர் கூறுவர். 'பூதனு' என்றது பிழைவழக்கு என்று தோரிகின்றது. உளம், ஆன்மா, 'அதனூடு என்பது அத்தூடு என மரீஇயிற்று'. (சீவஞான மாமுனிவர் உரை). அஃது என்பது அத்து என மருவும். பல் + து = பஃது. அது பத்து என மருவிற்று. அஃது+ஐ. எஃது + ஐ. பஃது + ஐ என்னும் மூன்றும் அத்தை எத்தை பத்தை என்றுயின. அஃது + அன் + ஐ = அதனை என்றுயிற்றுகக் கோள்க. 'சுட்டின் முன் ஆய்தம் அன்வரிற் கேடுமே' என்றது இலக்கணநூல். இலக்கணம் சோல்லாராய்ச்சி யில்லாராற் செய்யப்படுமேல் இவ்வாறுதான் அமையும். நீன், நீம் என்னும் இரண்டும் இப்போதும் வழக்கி லிருக்கின்றன. அவற்றிற்கு இலக்கண நூற்கூற்று யாவை? நின்னை, நீங்கள், நும்மை, நீயிர், நீவிர் என்பனவற்றின் இலக்கணம் எந்நூலில் செவ்விதிற் கூறப்பட்டுளது.

அத்தூடு - உள்ளதே தோற்ற அங்கனம் தோன்றிய யாதனு சரீரத்தோடு. யாதனு சரீரம் - பேருந் துன்பயாக்கை. விண்படர்ந்து என்னும் உபலட்சணத்தால் நிரயம் படர்ந்து என்பதும் பெற்றும். படர்ந்து - படர்ந்து அநுபவித்து; காரணம் படர்தல். காரியம் அநுபவித்தல் - அநுபவித்தல் ஆகிய காரியத்தைப் படர்தல் ஆகிய காரணமாக உபசரித் தார்.

இனி இறந்த உயிரே பிறக்கும் ஆயின், முற்பிறவியின் நிகழ்ந்தன எல்லாம் இப்பிறவியின் அறிதல்வேண்டும் என்னும் ஆசங்கையை நீக்குதற்குக் 'கண்ட நனவைக் கனவுணர்வின் தான் மறந்து என்று உவமை கூறினர். கண்டநனவை - நனவின்கட்கண்டவற்றை என்க. இன் - உவமவுருபு. தான் - அசை. மறந்து - என்றதற்குச் செயப்படு பொருள் :- கண்செவி கேட்டவாறும் உள்ளதே தோற்ற அத்தூடு விண்படர்ந்தவாறும் ஆண்டு அநுபவித்தவாறும் முதலியன.

அற்றேல், ஈன்று அணிய குழவி தாய்முலைப்பால் பசி தீர்க்கும் மருந்தென்று அறிந்து அதன்கண் முயலுதற்கு ஏது யாது ? முதல்வன் உணர்ந்து செலுத்துவன் எனின், குழவியின்பால் அவ்வரிமை இல்லாவழி முதல்வன் செலுத்துதல் சாலாது. சாலும் ஆயின், உயிரில்லாப் பொருளையும் தொழிற்படுத்துதல் வேண்டும் எனின், அஃது ஒக்கும். அவ்வாறு ஆதல்பற்றி ஈன்று அணிய குழவி சீவித்தற் பொருட்டு அப் பருவத்தின் அவ் வுணர்வு மாத்திரம் மறவாமல் நிலைபேறச்செய்பவன் முதல்வன் எனக் கொள்ளுவம்.

முன்னுடம்பு இறக்கும் ஞான்று மனம் யாண்டுச் சென்று பற்றியது ? ஆண்டு வந்து மீளப்பிறக்கும் என்பார் மனம் தள்ளக் கருவில் விழும் என்றார். தள்ள - தள்ளுதலால். அக்கருவில் எனச் சுட்டி வருவித்துரைக்க.

வினையிலுல் - புண்ணிய பாவ சேடத்தால். இதனாலே மனம் தள்ளிய கதியில் உயிர் சென்று உடம்படுத்தற்கு ஏது ஆகிய புண்ணிய பாவசேடங்கள் எஞ்சிநிற்ப, ஏனையவை துறக்கத்தும் நிரயத்தும் சென்று அநுபவிக்கப்படும் என முடிவின்கண் படும் ஐயத்தை நீக்கியவாறு காண்க.

பஞ்சாக்கினிவித்தையின் இயல்பை விண்படர்ந்து மறந்து அணுவாய்ச் சென்று கருவில் விழும் என்றார். அணுவாய்ச் செல்லல் - துறக்க நிரயங்களில் எடுத்த பூதசாரம் முதலிய உடம்பின் நீங்கிச் சூக்குமதேக மாத்திரமாய்ச் செல்லுதல்.

பஞ்சாக்கினி வித்தையை அடுத்த இதழில் காண்க. துறக்க நிரயங்களில் படர்ந்து அநுபவிக்கும்போது அறிவு திரியாமை புராணங்களுட் காண்க.

(தொடரும்)

பூமாரி சொரிதல்

முதுபேரும்புலவர்

திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்

முதல்வர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.

திருக்கோயில்களுள் வழிபாடு புரிய விரும்பும் அன்பர் பூமாரி சொரிதல் இன்று தோன்றிய புது வழிபாடு அன்று. தோன்று தோட்டு நிகழ்ந்து வந்த வழிபாடே ஆகும். அரும்பும் போதும் பூவும் இலையும் கொண்டு வழிபடுதல் என்றும் உள்ள பெருவழக்கே அன்றி அருகிய (சிறு) வழக்கன்று. விண்மாரி சோரிந்து மண்ணில் வாரி பெருகி ஓடி எங்கும் வேள்ளக்கா டாதலும் மழையே இன்றி எங்கும் வறண்ட நிலமாய் வேயிற் காடாதலும் உலகியற்கை. இம்மாறுபாட்டால் அரும்பும் அரும் பாது. போதும் போதும் என்று சொல்லி உள்ளம் நிறைய ஒரு போதும் போதுகூடக் கிடையாது. பூவைக் கண்டு களிக்க விரும்புங் கண்கள் அப் பூவைக் காணுது பூத்துப் போய்விடும். இலையோ எங்கும் இலையே என எண்ணி வருந்தும் அன்பகம்.

திங்கள் மும்மாரி சோரிந்துவரின் எங்கள் பேருமான் திரு வடி வழிபாடு ஒழிபாடிலாது நடைபேறும். அன்பர் வினையேல் லாம் அழிபாடும் கழிபாடும் உறும். பண்டை நாளிலே திருக் கோயிலிலே அன்பர் அனைவருக்கும் அன்பு நிறைந்த நெஞ்சார நினைந்து, தலையாரக் கும்பிட்டு, வாயாரப்பாடி, நாவாரப் புகழ்ந்து, சித்தம் ஆரச் சிந்தித்துக் கையாரத் தொழுதனர். அத்தொழுகையில் அவர் கையெல்லாம் மலர்க்கையாகத் திகழும் அகமெல்லாம் அழுகைக்கு நெகிழ்ந்து நிற்கும். உடம்பெல்லாம் கீழே அடியற்ற மரம்போல விழுகைக்குத் தவருது. இக்கால வழிபாட்டு முறைக்கும் அக்காலத்து அவர் வழிபாட்டு முறைக் கும் வேறுபாடு பேரிது. அக்காலத்து 'வழிபாடு' வேற்றுமைத் தொகையாய் வழியிற்படுதல்; அருள்வழியிற் படுவது என்னும் பொருள் உணர்த்துவது. இக்காலத்து வழிபாடு வினைத்தொகை. இஃது எக்காலத்திலும் விரிக்கப்படும் பொருளுடையது எனினும் எதிர்காலத்தில் விரிப்பதே சால இனியது. வழிபடும் முன்னரும் வழிபட்ட பின்னரும் உண்ட பொருளின் நின்ற நெய்யோ வெண்ணெயோ தைலமோ மற்று யாதோ முழங்கை வரை

வழியும் பாடு எனலும் போருந்தும். முற்காலத்தில் திருக்கோயி லுக்கு வழிபடச் செல்வார் உண்டு செல்லார். நீர் அருந்தியும் ஏகார். அதனுல் இழிசேயல் யாதும் இறைவனிடங்களைச்சார்ந்த எவ்விடங்களிலும் செய்யார். இக்காலத்தார் செயலைத் திருக்கோ யிலின் உள்ளும் வெளியும் உள்ள இடமே காட்டிவிடுகின்றன.

மலைநாட்டார் திருக்கோயிலைப் போற்றுவது போலத் தமிழகத்தார் போற்ற அறிந்திலர். அவராசாரம் தேவராசார மாகவும் இம்மக்கள் ஒழுக்கம் விலங்கோழுக்கமாகவும் இருப்பது பெரிதும் வருந்தத்தக்கதே.

திருமுறைகள், திருக்கோயில்களுக்குச் செல்வோர் எல்லோ ரும் கையில் இலையோ முகையோ போதோ மலரோ எல்லாமோ கொண்டு சென்று வழிபடல் வேண்டும் என்று உணர்த்து கின்றன. அவை கூறுமாறு இப்போது நாம் செய்யமுடிய வில்லை. ஏன்? தொல்லைப்பழக்கம் முறைக்கேட்டால் பெருந் தொல்லைப்பழக்கம் ஆகி, வழிபாட்டுமுறையில் ஆண்டவனுக்கும் அடியார்க்கும் இடையில் ஆகமஞானம் இல்லாத தருமகர்த்தர் முதலியோர் ஏற்பட்டனர். அவர்க்கு நாம் தரும் பொருள் கொண்டு, ஆண்டவன் தந்ததாகக் கொள்ளப்படும் அருட் பொருளை அவர் தருவதாக எண்ணி மீளும் பொய்வழியால் மெய் வழிந்து போயிற்று. இதற்குக் காரணம் வினைத்தொகை வழி பாடே அன்றி வேற்றுமைத்தொகை வழிபாடன்று.

ஆடவரோ பெண்டிரோ அந்தணரோ பார்ப்பாரோ வேடரோ வேந்தரோ இழிகுலத்தாரோ உயர்குலத்தாரோ அன்புடைய ராயின், ஒழுக்கம் உடையராயின், முறை வழுவா நெறி விலகா ராயின் ஆண்டவனை நேரே வழிபட்டு அருள்பேற்று மீள்வர். இது பண்டைய நன்னெறி. இவ்வுண்மையைத் திருமுறைகள் விளக்குகின்றன. நீராட்டிய நெறியைத்

> " தடங் கொண்டதோர் தாமரைப் பொன்முடி தன்மேல்
> குடங் கொண்டடியார் குளிர்நீர் சுமந்தாட்டப்
> படங் கொண்டதோர் பாம்பரை யார்த்த பரமன்
> இடங் கொண்டிருந்தான் தன் இடைமருது ஈதோ? "

எனத் திருஞானசம்பந்தர் கடாவியருளினர், இதில் அடியார் மகாலிங்கப் பெருமானுக்குக் குடநீராட்டும் உண்மை விளங்கும்.

'போதோடு நீர் சுமந்தேத்திப் புகுவாரவர் பின் புகுவேன்' இப் போதும் முற்போவார் நேர்வாரேல். ஏன்? 'இட்டுக்கொள்வன பூவுள நீருள; கற்றைச் சேஞ்சடையான் உளன் நாம் உளோம். எற்றுக்கோ நமனூர் முனிவுண்பதே?' 'நறுமலர்ப் பூவும் நீரும் நாள்தோறும் வணங்குவார்க்கு அறிவினைக் கொடுக்கும் ஆரூர் அப்பனே' இதனை மீண்டும் அருள்வாஞனுல், நோச்சியம் பச்சிலையால் நுரை தீர் புனலால் தோழுவார்; நச்சிய நன்னிலத் துப் பேருங்கோயில் நயந்தவனே' நயந்துகோள்ளும்படி.

அண்மையில் உள்ள சீகாழியில் கன்னியர் நாள்தோறும் நறுமலர் புனலோடு தூபம் சாந்தமும் ஏந்திய கையினராய்ப் பரவிய உண்மையை அங்குத் திருவவதாரம் புரிந்த பிள்ளையார் மலர்க் கண்ணுற் கண்டார். திருவாயாற் பாடினர். செவியாற் கேட்பார் யார்?

"முன்னுயிர்த் தோற்றமும் இறுதியும் ஆகி
முடியுடை அமரர்கள் அடிபணிந் தேத்திப்
பின்னிய சடைமிசைப் பிறைநிறை வித்த
பேரரு ளாளனூர் பேணிய கோயில்
பொன்னியல் நறுமலர் புனலொடு தூபம்
சாந்தமும் ஏந்திய கையினர் ஆகிக்
கன்னியர் நாள்தொறும் வேடமே பரவும்
கழுமலம் நினைவர்நம் வினைகரி சறுமே."

திருக்கோகரணம் வடநாட்டில் மேற்கடற்கரையில் உளது. ஆங்கே சென்று வழிபட அனைவர்க்கும் எண்ணம் தோன்றுது. 'திருக்கோகரணம்' என்பதில் கால்போனுல் யாதாம்? அதுவே நம் கரணநிலை. அதில் உள்ள ஒகாரம் எதிர்மறைப் பொருள தாயின் அக் கரணமே அத் தலத்தை அடையும். இச்சுவை யறிய இலக்கண ஞானம் உடையாரே வல்லார். தமக்குத் தேரி யாதனவற்றை யெல்லாம் கடிய நடை என்று ஒதுக்குவார்க்கும் விளங்கும்படி எழுதக் கடவுளே வல்லாராவார். நாம் வல்லம் அல்லம்.

திருக்கோகரணத்தில் மாதர்களும் ஆடவர்களும் மலர் தூவி வழிபடுவார்கள் என்பர். அது வட நாட்டிற்குத் தகும். தென் னுட்டிற்குத் தகாது என்று தட்டிக்கழிக்கலாம். சீகாழியில்

திருவிடைமருதூரில் அவ்வழக்கம் இருந்ததால் தட்டவோ, கழிக்கவோ இயலுமோ?

" பேதைமட மங்கையோரு பங்கிட மிகுத்திடப மேறியமரர்
வாதைபட வண்கட லெழுந்த விடமுண்ட சிவன் வாழுமிடமாம்
மாதரோடும் ஆட வர்கள் வந்தடி யிறைஞ்சி நிறைமாமலர்கள்
கோதைவரி வண்டிசைகொள் கீதமுரல் கின்றவளர் [தூய்க்
கோகரணமே."

என்பது வடநாட்டு வழக்கம் உணர்த்துவதாகலாம். திருச்சேங் காட்டில் உள்ளதும் அவ்வாருமோ?

" நறைகொண்ட மலர்தூவி விரையளிப்ப நாள்தோறும்
முறைகொண்டு நின்றடியார் முட்டாமே பணிசெய்யச்
சிறைகொண்ட வண்டறையுஞ் சேங்காட்டங் குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான் கணபதீச் சரத்தானே'

" பாலினுல் நறுநெய்யால் பழத்தினுல் பயின்றுட்டி
நூலினுல் மணமாலை கோணர்ந்தடியார் புரிந்தேத்தச்
சேலினுர் வயல்புடைசூழ் சேங்காட்டங் குடியதனுள்
காலினுற் கூற்றுதைத்த கணபதீச் சரத்தானே"

இத்திருமுறைப் பொருளோடு இப்பொழுது திருக்கோயிற் பூசை புரிவார் நிலைகளை ஒப்புநோக்கியுணரின், வழிபடற்கென்றே தனியாக அமர்த்திவைத்த சைவர் என்பதும் அவர்களைப் பலர் இழிஞராக் கருதிவரும் பழக்கமும், கீழோர் என்பது நீங்க மேலோராக முயலும் அவரது வேட்கையும் இன்னேரன்ன பிறவும் நன்கு புலனுகும். ஆகவே தென்னர் தம்மை வடவரெனத் தோற்றிக்கொள்ள முயல்வது வெளிப்படுகின்றது.

திருவையாற்றிலே திருநாவுக்கரசு நாயனுர் அருளிய வற்றுள்,

" பிறையிளங் கண்ணியினுனைப் பெய்வளையாளோடும் பாடித்
துறையிளம் பன்மலர் தூவித் தொழுதெழக் குளிரத் தொழுவேன்"

என்பதும் ஒன்று. 'மலர் தூவித் தொழுதேன்' என்று அவர் களே செய்த வழிபாட்டைத் தெரிவித்தருள்கின்ருர்கள். நம் ஆக்கைக்கு அப் பயன் வேண்டும் என்று உணர்த்தத் திருவுளங் கொண்டு, எதிர்மறைப் பொருளில் வற்புறுத்தும் முறையில்,

" ஆக்கையாற் பயன் என் ? அரன்கோயில் வலம் வந்து
பூக் கையால் அட்டிப் போற்றி என்னுதஇவ்
வாக்கையாற் பயன் என் ?"

என்று பாடினர்கள்.

" இச்சையால் மலர்கள் தூவி இரவோடு பகலும் தம்மை
நச்சுவார்க் கினியர் போலும் நாகஈச் சரவ னூரே."

என்று மலர்தூவுதலில் இச்சை இன்றியமையாதது என்றும், அடியார் இச்சையிற் குறையினும் ஈசன் கொள்வதிற் குறை வில்லை; 'பாங்கு அறியா என போலிகள் பறித்து இட்ட இலையும் முகையும் எல்லாம் அம் போது எனக்கொள்ளும் ஐயன் ஐயாறன் அடித்தலமே .....தழைப்பன.' என்றும், தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று அழுது காமுற்று அரற்றுகின்ரு ரையும்..... எழுதுங் கீழ்கணக்கு இன்னம்பர் ஈசனே' என்றும், 'தோண்டு பாடியும் தூமலர் தூவியும் இண்டைகட்டி இணையடி ஏத்தியும் பண்டரங்கர் பராய்த்துறைப் பாங்கரைக்கண்டு கொண்டு அடியேன் உய்ந்து போவனே' என்றும் படர்க்கை யிலும் தன்மையிலும் வைத்துப்பாடிய அப்பர் சுவாமிகள் முன்னிலையில் அன்பர்களே எண்ணி',

" அரும்பு அற்றப்பட ஆய்மலர் கொண்டுநீர்
சுரும்பு அற்றப்படத் தூவித் தொழுமினே
கரும்பு அற்றச்சிலைக் காமனைக் காய்ந்தவன்
பெரும்பற்றப் புலியூர் எம்பிரானையே."

" விண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்
அண்டநாயகன் தன் அடி சூழ்மின்கள் "

" பூமாலை புனைந்துஏத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடி
அலருநில்."

என்று இரக்கத்தால் ஏவியருளிய வண்ணம் நின்று நாமும் மலர்தூவி வழிபடுவோம்

மலர்தூவி வழிபடுதல் பலவகைப்படும். அவற்றுள் அரும்பு களோ (முகையோ) போதுகளோ மலர்களோ கைநிறையக் கொண்டு ஒருமுறை திருவடியில் விழத் தூவிவிட்டு வணங்கி

வழிபடுதல் எளிது. மாலைகட்டிச் சார்த்தி வழிபடுதல் அதனின் அரிது. இண்டை முதலியன கட்டிச்சார்த்திக்கண்டு இன்புறும் வழிபாடு அதனினும் அரிது. இத் திருமுறைப் பகுதிகளில் அரும்பு, போது, மலர் (பூ, நாண்மலர், விண்டமலர்), இண்டை முதலாகப் புனையும் பூமாலை எல்லாம் கூறப்பட்டன.

மலைநாட்டில் மலர்தூவும் வழிபாடு தோன்றுதோட்டு உண்டு. அது மிகச் சிறந்தது. செய்தற்கு அரியது. செய்கையிற் பெரியது. செலவிலும் விரிவது. தருமையாதீனம் 25 ஆம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தாம் முதல் முதலாக இத்தமிழகத்தில் அதைப் புதுநெறியில், இதன்முன் எங்கும் எவரும் செய்துமட்டும் அன்று; எண்ணியும் அறியாத அற்புதமும் அதிசயமும் நிறைந்து கண்டோர் களிக்க, கேட்டோர் காணுமைக்கு நாணிமுகஞ் சுளிக்கவும் வாய் இளிக்கவும், தருமைக் கோற்றவைக்கும் திருக்கடையூர் அபிராம வல்லிக்கும் மயிலாடுதுறை அஞ்சோலாட்கும் நிகழ்த்துவித்தருளினர்கள். அது தோல் வழக்கில் இருந்த நன்னெறியே ஆகும். அதற்குச் சான்றுகப் பதினொன்றாந் திருமுறையில், மலைநாட்டரசர் ஆகிய சேரமான் பெருமாள் (கழறிற்றறிவார்) நாயனார் தாம் அருளிய 'திருக்கயிலாய ஞானவுலா' வில், பூமாரி சொரியும் பண்டைய முறைமையை எழுத்தோவியத்தில் அமைத்தருளினர். அதனை ஒட்டித் திருக்கோயில்தோறும் இப்பூமாரி சொரியும் வழிபாடு புரிவது காமாரி அருளைப்பெறும் சிவநெறி வழிபாடு ஆகும். கைகள் நிறைய மலர்களை எடுத்துக்கொள்ளல். சிவகீர்த்தனங் களையெல்லாம் போற்றி என்று ஈற்றில் அமைத்துப் புகழ்ந்து ஓதுதல். ஓதுகின்ற ஒவ்வோரு முறையிலும் இருகையிலும் நிறையக்கொண்ட மலர்களைச் சொரிதல். இம்மூன்றும் ஒரு சேர உடன் நிகழ்தல். அதற்கு ஓர் எடுத்துக்காட்டு இது :-

1. " மேலையிமையோர் பெருமானே போற்றி
2. எழில்சேர் உமையாள் மணவாளா போற்றி
3. எமை ஆளும் தீயாடி போற்றி
4. சிவனே அடி போற்றி
5. ஈசனே எந்தாய் இறை போற்றி
6. தூயசீர்ச் சங்கரனே போற்றி

7. சடாம குடத்தாய் போற்றி
8. போங்கர்வா போன்னங்கழல் போற்றி
9. அருச்சுனற்குப் பாசுபதம் ஈந்த பதம் போற்றி
10. தூய (கயிலை) மலைமேலாய் போற்றி
11. மயானத்தாய் போற்றி
12. வானோர் தலைமேலாய் போற்றி
13. தாள் போற்றி
14. நிலை போற்றி
15. போற்றி (திருக்கயிலாய ஞானவுலா. கண்ணி 51-56)

எனப் பூமாரி பெய்து'' என்று பாடியருளினார் மலையாளப் போற்றியார். இதனால், பூமாரி சொரிதல் பண்டைய நன்னெறியே என்பது இனிது விளக்கப்பட்டது. வாழ்க சிவநேறி. வாழ்க கயிலைக் குருமணியின் திருவடிமலர்கள். அந்நாட்டிற் போற்றிகள் என்பார், இக்காரணத்தாற் பெயர்பேற்றவர்களே. மாரி சொரிதல் என்பதே பிழையிலாத பெருவழக்கு. பெய்தல் வேறு சொரிதல் வேறு. அதன் ஆராய்ச்சி எண்டில்லை. நாம் பூமாரி சொரிந்து இன்பக் கடலில் திளைப்போம்.

நவமணிமாலை கீர்த்தனை

வித்துவான், திரு. ப. இராமநாதபிள்ளை, தமிழாசிரியர், மன்னார்குடி.

இராகம் - சாவேரி] [தாளம் - திருபுடை

பல்லவி

காவேரி தீரந்தன்னில் — காவளர் தர்மபுரம்
நாவேறத் துதிசேய்யும் — நவசக்தி லக்ஷ்மிதுர்க்கை (காவேரி)

அநுபல்லவி

சாவேரி ராகம்பாட — சாமமறைமுழங்க
சேவேறு மீசர்க்கன்பர் — சேர்ந்து தோழுதிடுவார் (காவேரி)

சரணம்

மீனேறு நீர்நிலையும் — சேணேறு கற்பகமும்
தேனேறு மலர்ஒங்கு — வானேற மாமணம்
தானேறத் தேவர்கணம் — தான்தேருச் சிவஞானக்
கோனேரும் சுப்ரமண்ய — குரவனூர் மகிழ்ந்தேத்து (காவேரி)

ஆவணிமூலத் திருநாளில்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின்

அருளாசி

[தகுமையாதீனம் ஆவணிமூலத் திருநாளில் காலை 9 மணிக்குத் தொடங்கி ஸ்ரீ சோக்கலிங்கப்பெருமானுக்கு வழிபாடுகள் நடந்தன. மாலை 6 மணிக்கு முப்போருள் மாநாட்டின் மூன்றும் நாள் நிகழ்ச்சி தொடங்கியது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி முதல்வர், பேராசிரியர், திரு. அ. சீனிவாசராகவன் M. A., அவர்களுக்குச் " செந்தமிழ்ச் செம்மல் " என்ற பட்டம் வழங்கியருளினார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் அருளிய அருளாசி வருமாறு :-]

அன்பர்களே !

நமது சமயத்தில் தலைசிறந்தநூல் திருவிளையாடற் புராணம். இது சோக்கலிங்கப்பேருமான் அடியவர் பொருட்டாக நிகழ்த்திய 64 திருவிளையாடல்களைச் சொல்லுவது.

சோக்கேசன் எல்லார்க்கும் முன்னே முளைத்தவன். ' முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி ' என்றார் திருநாவுக்கரசு சுவாமிகள். அப் பெருமான் கைவரப்பெற்றுக் களித்த நமது குருமூர்த்திகளாகிய குருஞானசம்பந்தர் 'மூலமாய் எங்கும் முளைத்தவன்' என்று கூறுகின்றார்கள்.

" ஆலந் தரித்த லிங்கம் ஆலவாய்ச் சோக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்த லிங்கம் —பாலொளியாம்
மத்தனே கூடல் மதுராபுரி உமையாள்
அத்தனே ஆலவாயா "

திருப்பாற் கடலில் அமுதத்திற்கு முன்னே தோன்றி யச்சுறுத்திய ஆலகாலத்தைத் தானுண்டு அமுதத்தைப் பிறர் உண்ண வழங்கியவன் இறைவன். பிறர் இடுக்கண் தீர்த்தலையே

குறிக்கோளாகக் கோண்டு இங்கு அவன் எழுந்தருளியிருக் கிருன். உங்கள் துன்பங்களை அவனிடம் தேரிவித்தால் துன்பம்நீங்கவும் இன்பம் ஒங்கவும் பேறலாம் என்பதைக் குறிப் பது ' ஆலந்தரித்தலிங்கம் ' என்ற தோடர்.

மதுரையில் எழுந்தருளிய சோக்கேசனே இத்தருமைத் திருநகரிலும் திருக்கோயில் கோண்டு எழுந்தருளியுள்ளான் என்பதைக் குறிப்பது ஆலவாய்ச் சோக்கலிங்கம் என்ற தோடர். மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம் என்ற தோடர் எல்லா வற்றிற்கும் மூலகாரணன் சிவனேயாவன். பல வழிகளில் சென்று இடர்ப்படாது மூல காரணனுய் முளைத்த அப்பெரு மானையே வழியடுங்கள் என்பதைக் குறிப்பது. பாலொளியாம் மத்தன் (நேற்றியன்) என்ற தோடர் அரிய பொருளைத் தேரி விப்பது. பாலொளி - வேண்மைநிறம். சோக்கலிங்கப்பெரு மான் தருமையிலே பாலொளியோடு ஸ்படிகலிங்கமாக விளங்கு கின்ருன். நவரத்னச் சிவலிங்கங்களுக்குத் தனித்தனியே பயன்கள் கூறப்படுகின்றன. மரகதம் மாணிக்கம் போன்ற மணிகளாலியன்ற சிவலிங்கங்களைப் பூசை செய்வார் இம்மை மறுமைப் பயன்களும் வீடுபேறுமாகிய எல்லாவற்றையும் அடைவர். ஸ்படிக லிங்கத்தைப் பூசை செய்வோர், வீடு பேருகிய பேரின்பம் நுகர்வர் என்ற பயனையும் நாம் அறிதல் வேண்டும்.

ஆலவாயில் பெருமான் அன்று நிகழ்த்திய திருவிளையாட லின் நினைவுநாள் ஆவணிமூலத் திருநாள். அப்பெருமான் தன் அடியவர் பொருட்டாகத் திருவிளையாடல் புரிந்தார். அதற்குப் பரிசிலும் பெற்ருர். இங்கு அடியவர் என்றது மணிவாசகப் பெருமானை. பரிசு வந்தியிடம் பெற்ற உதிர்ந்த பிட்டு.

> ' அரும்பிட்டுப் பச்சிலையிட்டு ஆட்சேய்யும் அன்னையவள்
> தரும் பிட்டுப் பிட்டுண்டாய் தலையன்பிற் கட்டுண்டே ''

என்று குமரகுருபரர் மதுரைக் கலம்பகத்தில் அழகாகக் கூறு கிருர். தலையன்பிற் கட்டுண்டான். எதற்காக? தன்னடியவள் வந்தியின் மனக்குறை நீக்குவதற்காக. அப்பெருமான் - மண் ணுலகில் மட்டுமின்றி விண்ணுலகிலும் நிரம்பிய புகழை யுடையவன். நேற்றிக்கண்ணையுடைய நிமலன். அப்பெரியவன்

தான் வைகை வேள்ளத்தை அடைக்க வந்திக்குக் கூலியாளாய் வந்தவன்.

வந்தி சிறந்த தவப்பேறு உடையவள். அவளது அன்பின் பெருமையைத் திருவிளையாடல் சிறப்பித்துப் பேசுகிறது.

" செவியுணவான வேதச் சிரப் போசுள் உணர்ந்து சேந்தீ
அவியுணவூட்டும் ஈசன் அன்பரின் ஆற்ற நோற்றுள்
தவநிறை பேறுதுய்ப்பாள் தாயிலார்க்கு அன்னை ஒப்பாள்
சுவையுறு பிட்டு விற்றுண் தொழிலினுள் தமியளாவாள். "

" வைகலும் அவித்த செவ்விப் பிட்டினை மருங்கு நான்கு
கைகளாய் முளைத்த முக்கட் கரும்பினை யரும்பு மூரல்
செய்கதிர் முகத் தானந்தத் தேறலை ஆலவாய் எம்
ஐயனை அகத்தால் நோக்கி அன்பினுல் அருத்தி விற்பாள். "

என்று வந்தியின் பெருமை சிறப்பிக்கப்படுகிறது.

மணிவாசகரின் பண்சுமந்த பாடலுக்காக அப்பெருமான் மண் சுமந்தான், கூலிகோண்டான், பாண்டியனுல் பிரம்படியும் பட்டான். நரியைக் குதிரைப்பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்தான். இவ்வாறு வந்திக்காகக் கூலியாளாய் வந்து மணிவாசகரின் பெருமையை அரிமர்த்தனனுக்கு அறிவித்த திருநாள்-பிட்டையுண்ட பெருமான் திருநாள் - ஆவணிமூலத் திருநாள்.

தருமைக்கும் இந்தத் திருநாளுக்கும் என்ன தொடர்பு? என்பதைப்பற்றி எண்ணுதல் வேண்டும்.

" தருமையும் கமலையும் விரிதமிழ்க்கூடலும்
திருநகராக அரசு வீற்றிருக்கும்
மாசிலா மணித் தேசிகர் "

என்று பண்டாரமும்மணிக்கோவையில் குமரகுருபரர் கூறுகிறார். ஆசாரியன் எழுந்தருளியுள்ள இடமும் ஆசாரியனுக்கு ஆசாரியன் எழுந்தருளியுள்ள இடமும் அவரது ஆன்மார்த்த மூர்த்தி எழுந்தருளிய இடமும்தொடர்புடையன அல்லவா. கூடல் தருமையோடு தொடர்புடையது. மதுரையை விரிதமிழ்க்கூடல் என்று கூறுகிறார். விரிதமிழ் என்பது முக்காலத்திற்கும் பொருந்தும். சங்கம் வைத்துத் தமிழை வளர்த்த இடமல்லவா?

பெருமான் அந்தத் தமிழ்ச் சங்கத்திலே தமிழ்ப் புலவராக இருந்து தமிழாராய்ந்தான். அதுமட்டுமின்றி

"நன்பாட்டுப் புலவனுய்ச் சங்கமேறி
நற்கனகக் கிழிதருமீக்கு அருளினேன்காண்"

என்று அப்பர் சுவாமிகள் கூறியுள்ளார்கள்.

தண்டமிழ்ப் புலவராய்த்தருமி என்ற ஆதிசைவச் சிறுவனுக் காகப் பெருமான் தமிழ்ச் சங்கம் சென்று நக்கீரரோடு வாதம் புரிந்தான்.

அதுமட்டுமல்ல, பாணபத்திரனுக்குத் திருமுகப் பாசுரம் ஒன்றும் எழுதிக்கொடுத்தான். தமிழ்ப் புலவரை ஆதரித்த பெரு மான் செந்தமிழ்ச் சொக்கன். பாணபத்திரனுக்கு அப்பெருமான் அளித்த திருமுகப்பாசுரம் பதினொராம் திருமுறையில் முதல் இடம் பெற்றிருக்கிறது.

மதிமலி புரிசை மாடக்கூடல்
பதிமிசை நிலவுபால் நிறவரிச்சிறகு
அன்னம் மயில்பொழில் ஆலவாயில்
மன்னியசிவன் யான்மொழி தருமாற்றம்
பருவக்கோண் மூப்படியேனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவீஒளிதிகழ்
குருமாமதி புரைகுலவிய குடைக்கீழ்ச்
சேருமா உகைக்கும் சேரலன்காண்க
பண்பால் யாழ்பயில் பாணபத்திரன்
தன்போல் என்பால் அன்பன்தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்போகூள் கொடுத்து வரவிடுப்பதுவே

இத் தெய்வத்தமிழ்ப் பாடலின் அருமை பெருமைகளை எண்ணிப்பாருங்கள். அடியார்க்கு எளியன் என்று திருமுகம் எழுதிய அப்பெருமான் அரசர்க்கு எழுதும்போது ஆலவாயில் மன்னிய சிவன் யான் என்று எழுதுகிறார்.

சேரவேந்தர் சேரமான்பெருமாள் பாவலர்க்கு உரிமையின் உரிமையின் உதவி வருபவர். அவரும் தம் அடியவர். தாம் அனுப்பிய பாணபத்திரரை அரசிருக்கச் செய்து தம்நாட்டிலேயே

ஒருக்கால் இருத்திவிடுவார் என்ற எண்ணம் தோன்ற மாண் பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே என்று எழுதுகிறார். பாண பத்திரர் தம்மிடம் காட்டும் அன்பு எத்தகையது என்று சேர வேந்தர்க் கறிவிக்கும் முறை அழகானது. தன்போல் என்பால் அன்பன். நீ எத்தகைய அன்பை என்னிடத்துச் செலுத்து கிறாயோ அத்தகையது அவன் அன்பு என்னும் தொடர் மிக அருமையானது. இவ்வாறு பல நய்ப்பொருள்களை உள்ளடக்கிக் கொண்டிருப்பது இத்திருப்பாடல்.

இவ்வாறு சேந்தமிழ்ச் சோக்கர் தமிழோடு கொண்ட தொடர்புகள் பல. சோக்கலிங்கப் பெருமான் தமிழோடு கொண்ட தொடர்புபோல வேறு எம்மொழியிலும் கொள்ள வில்லை. அவன் பெயரே தமிழ்ச்சோக்கன் என்பது. அந்தச் சோக்கேசனுடைய திருநாளில் ஒரு புலவரைப் பாராட்டுதல் பொருத்தமுடையதேயாகும். புலவர் வரிசையில் இதுவரை 9 புலவர்கள் ஆவணிமூலத் திருநாளில் பட்டம் அளிக்கப் பெற்றிருக்கிறார்கள். பத்தாவதாக ஸ்ரீநிவாச ராகவன் வருவது மிகப்பொருத்தமாகும். ஏனென்றால் பெருமாள் தசாவதாரம் எடுத்தவரல்லவா. திருவருள் வாய்ப்பாக விளைந்தது இந்த நிகழ்ச்சி. பத்துப்புலவர்களில் ஒருவராகஇல்லாமல் பத்தாவதாக இவர் பாராட்டப்படுவதை எண்ணும்போது திருவருட் பொருத் தத்தை நாம் வியக்காமலிருக்க முடியாது. சீனிவாசராகவன் பேராற்றல் உள்ளவர். அடக்கமே உருவானவர். செயற்கரிய செயல் செய்யும் பெரிய தீரர். யாராலும் முடியாத காரியத்தை இவர் திறம்பட முடிப்பவர். காத்தற் கடவுளின் பெயராகிய ராகவன் என்ற பெயரைத் தாங்கியவரல்லவா?

இந்த ஆண்டு ஆவணிமூலத் திருநாளில் யாருக்குப் பட்டம் வாய்க்குமோ என்று எண்ணும்போது திருவருள் வாய்ப்பாக முதலில் நம் எண்ணத்தில் வந்தவர் இவர்தான். திருவருள்தான் நம்மையெல்லாம் இயக்குகிறது. நம்மையெல்லாம் வாழவைக் கிறது. திருவருள் இல்லாமல் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது. திருவருள் நமக்குத் துணை செய்வதை நாம் பல வழிகளில் கண்கூடாகக் காணலாம். பல சுப சூசனங்களால் அறியலாம். நமமுடைய முயற்சியால் ஒன்றுமில்லை.

இவ்விழாவில் இதை உணர்த்துவதற்குத்தான் முப்பொருள் மாநாடு நடைபெற்றது.

இன்று பதித்திருநாள். பாசம் நீங்கிப் பசு பதியை அடைவதைக் குறிக்கும் திருநாள். பதியின் திருவருளைப் பெறுவதற்குத் திருமுறைகள் தான் நமக்குத் துணையாக உதவி செய்வன. திருமுறைகள் தான் நம் சமயக் கருவூலம்.

" ஆசையருப் பாசம் விடாய் ஆனசிவபூசைபண்ணுய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் — சீசீ
சினமேதவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய் "

என்று கூறியருளினுர்கள் நம் குருஞானசம்பந்தப் பெருந் தகையார். திருமுறைகளினுல் சைவ ஆதீனங்கள் வாழ்கின்றன. இனியும் வாழப்போகின்றன. இது உறுதி.

இந்தத் திருநாளில் சீனிவாசராகவன் அவர்களுக்குச் சேந் தமிழ்ச் செம்மல் என்னும் பட்டத்தை வழங்குகிறேம். சேந்தமிழ் என்பது தெய்வத் தமிழைக் குறிப்பது; தேவாரத் திருமுறைகளைக் குறிப்பது. குருஞானசம்பந்தப்பெருமான்;

" தேசுசெறிகமலை செங்கமலப் போற்பாதன்
பேசுதமிழ் ஞானப்பிரகாசன் — பாசவினை
வாட்டினுன் மீட்டும் நான் வாராவகை அருளைக்
காட்டினுன் கூட்டினுன் காண் "

என்ருர்கள். தமிழ் ஞானப்பிரகாசன் என்ற தோடர் திருமுறைகளையே பேசுபவன் என்பதை உணர்த்துகிறது. சேந்தமிழ் என்று சொல்லும்போதே திருமுறைகளைத்தான் குறிக்கும்.

" பாசவினைவாட்டினுன் மீட்டும் நான் வாராவகை
அருளைக் காட்டினுன் கூட்டினுன் "

என்ற தோடர்களை எண்ணிப் பாருங்கள். கண்டேன்; கண்ட அளவில் இப்பாசம் கழித்தேன்; அமுதைமுகந் துண்டேன்; சுகானந்தத்துள் இருந்தேன் என்று பிறிதோரு பாடலிற் சொல்வதுபோல திருக்கண் சார்த்தலாகிய தீட்சையினுலே பாசவினைகளை ஓட்டிப் பக்குவப்படுத்தினுன். பாசிபடுகுளத்தில் கல்லெறிதல்போல பாசவினை பின்னர் வாராது அருளை வினைத் தான். பேரின்ப வடிவாகிய சிவத்தோடு இரண்டறக் கலக்கும்

நிலையைக் கூட்டினுன் என்று கூறுகிருர். இந்த ஒரு பாடலி லேயே பதிபசுபாசம் முற்றக் கூறப்பட்டன. உயிர்கள் பாசம் நீங்கிச் சிவ பரம்போருளே யடையும் நேறி கூறப்படுகிறது. பதி பசுபாசம் உணர்தல் இந்தப் பாடலில் இரண்டேகால் வரிகளில் அடங்கியிருப்பதைப் பாருங்கள். மணிவாசகர்பேருமானுடைய திருவருளைப் பேற்ருர்.

" பாய்பரியோன் தந்த பரமானந் தப்பயனைத்
தூயதிரு வாய்மலராய் சோல்செய்து — மாயக்
கருவாதையாம் அறியாவாறு செய்தான் கண்டீர்
திருவாத வூராளும் தே "

என்று கூறுகிருர் ஒருபேரியவர். மணிவாசகரின் திருவாய் - மலராகும் அதில் தோன்றிய திருவாசகம் தேனுகும். 625 பாடல்களையுடைய திருவாசகமும் 400 துறைகளாலாகிய திருக்கோவையாரும் முறையே தோத்திரமும் சாத்திரமுமாக அமைந்தவை.

அவனருளாலே அவன்தாள் வணங்கும் முறையிலே சோக்கநாதப்பெருமான் திருவருளை வாழ்த்திச் " செந்தமிழ்ச் செம்மல் " என்ற பட்டத்தை உங்கள் முன்னிலையில் சீனிவாச ராகவன் அவர்களுக்கு அளிக்கின்ருேம்.

" வாராய்—முருகேசா ! "

(வே. நடாதூர்நம்பி)

இராகம் - மோகனம்] தாளம் - ஆதி

பல்லவி

இசைதன்னில் வருவீரையா—முருகா
இன்பமுடனே எந்தன் துன்பம் துடைத்திடவே (இசை)

அநுபல்லவி

விசைபோன்று வீரைவுடனே வேல்கோண்டு மால்மருகா
(என்)திசைநாடி அன்புடனே தரிசனம் தந்துநிதம் (இசை)

சரணம்

இன்னிசைப் பாவினுல் இனிதுனைத் துதித்தேன்
மண்மீசை அருள்செய்ய மனங்கொண்டு அழைத்தேன்
குறமகள் வள்ளியுடனேன் குறைகளைப் போக்கிடவே
திறங்கொண்டு பரசிவப் புதல்வனே யுடனீயும். (இசை)

"சேந்தமிழ்ச்செம்மல்" என்ற பட்டம் பெற்ற

திரு. அ. சீனிவாசராகவன் M. A., அவர்களின்

சொற்பொழிவுச் சுருக்கம்

குருமகாசந்நிதானத்தின் திருவடிகளே நெஞ்சார வணங்குகின்றேன். பெரியோர்களுக்கும் பணிவான வணக்கங்கள். திருவருளாலும் குருமகாசந்நிதானத்தின் திருவருளாலும் கிட்டிய பெருமையினை எண்ணும்போது பேச நா எழவே இல்லை. சேந்தமிழ்ச் செம்மல் என்ற உயர்ந்த பட்டத்தை உயர்ந்த உள்ளம் படைத்த குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்க நான் பெற்றேனென்றுல் இதைவிடச் சிறந்த பேறு வேறு எனக்கு இல்லை. ஆங்கிலத்தைக் கற்று அதையே தொழிலாகக் கொண்ட எனக்கு இப்படி ஒரு பட்டமா என்று எண்ணுகின்றேன். நான் அந்நிய மோழியைக் கற்றுவிட்டேன் என்று தருக்கிய காலம் உண்டு.

ஆங்கிலத்தைக்கற்றுவிட்டேன் அறிவைஎலாம்அளந்துவிட்டேன்
ஈங்கெனக்கு நிகராவார் இல்லையென ஆணவத்தில்
தூங்கியவன் என்னையும் துயிலெழுப்பித் தருமை முனி
ஓங்குமொரு மெய்ஞ்ஞானம் உலவும்அருள் போற்றுகிறேன்

எத்தனையோ பேரறிஞர் இருந்திடவும் எண்ணுமல்
பித்தனைப்போல் ஏதேதோ பேசிநின்ற பேதையனை
உத்தமன் என் குருநாதன் உயர்தருமை மாமுனிவன்
அத்தனருள் காட்டிஇங்கே அணைத்தஅருள் போற்றுகிறேன்

எந்தவழிச் செல்வதென எப்பொருளை ஏற்பதென
சிந்தை தடுமாறி முற்றும் சிதறிநின்ற சிறியேனை
எந்தை சோக்கர் அருள்வடிவாம் தருமைமுனி எடுத்தணைத்துச்
சேந்தமிழின் செம்ம லெனச் செய்தவருள் போற்றுகிறேன்

வீட்டுக்கு இறைவன் வினையெலாம் வீட்டும் பெருந்துறையன்
காட்டின் நரியைப் பரியெனக் காட்டும் கருணையென
கேட்டு உணர்விலா என்னையும் சேந்தமிழ்ச் செம்மலென
நாட்டியது எங்கள் தருமைக்குருமணி நல்லருளே.

இன்று ஆவணிமூலத்திருநாள். இத் திருநாள் எதை நினைவுறுத்துகிறது என்பதைக் குருமகாசந்நிதானத்தின் திருவருள் என்போன்றூர்க்கு வழங்கியது. நரியைப் பரியாக்கி மாணிக்கவாசகரைமட்டுமின்றி உலகனைத்தும் பெருமான் உய்வித்த திருநாள் இவ்வாவணி மூலத் திருநாள். அதுபோல் குருமகாசந்நிதானத்தின்

அருள் இந்த நரியையும் பரியாக்கி உங்களைப் போன்ற தோண்டரோடு கூட்டியது. '' தோண்டரோடு கூட்டு கண்டாய்'' என்றார் தாயுமானார்.

தோண்டர்களாகிய அன்னவரே எம்கணவர் ஆவார் என மாணிக்கவாசகர் அருளினார். அதுபோல திருவருள் என்னையும் தோண்டரோடுகூட்டியது. தோண்டர்களாகிய உங்களைப்பார்த்து ஒன்று கூற ஆசைப்படுகிறேன். அது மணிவாசகர் திருவாக்கு. தோண்டர்களே! உண்மையன்பு உடையவர்களே! பற்று டையீர்! ஈசன் பழவடியீர்! பாங்குடையீர் புத்தடியேனுகிய என்னையும் புன்மை தீர்த்து ஆட்கொண்டருளல் வேண்டும். ஆவணி மூலம் இன்று. இதை எண்ணுகின்ற போழுது அன்றும் இன்றும் என்ற தலைப்புத்தான் உள்ளத்தில் தோன்றுகிறது. இன்று நரி பேருமான் அருளால் பரியாகியது. மணிவாசகர் அமைச்சராயிருந்த இறைப்பணத்தை இறைக்கு உரியது என்று கருதினர். இறைப் பொருளை உண்மை வழியில் பயன் படுத்தினர். அப்படிச் செய்தால் நாட்டுக்குத் தேவையானவை யெல்லாம் தாமே விளையும் என்று கருதினர். நாட்டுக்குத் துணைபுரிவது அமைச்சர் கடமை. இவ்வமைச்சர் அவன் பொருளை அவனுக்கே உரியதாக்கினர். அன்று அரசனுடைய பொருள் நாட்டுக்கு நன்மை பயக்க எண்ணி இறைவனுக்கு அளிக்கப்பட்டது. இன்றைய நிலையை மனம்விட்டு பேசப் பல தடைகள் உள்ளன.

ஆவணிமூலம் இறைவன் கருணையை எடுத்துக்காட்டுகிறது. நாம் பேசும் தமிழ் இறைவன் தன்மையை எடுத்துக்காட்டு கிறது. தமிழை நாம் பலவழியாகப் பயன் படுத்துகிறோம். உணவு வாங்க, விற்க போன்றவை; பயன்படுத்த வேண்டியதுதான். அப்படிப் பயன் படுத்துவதால்தான் மொழி வழிவழியாக வளர்ந்து வருகிறது. பல இலக்கியத்தையும், மொழியையும் கற்ற பல்கலைச் செல்வர், திரு. மீனாட்சிசுந்தரனார் இங்கு வீற்றிருக்கின்றார். நானும் சில மொழிகளைக் கற்றேன். அது என்னுடைய தொழிலின் காரணமாக. பல இலக்கியங்களிலும் ஒரு சில கற்றேன். ஷாஅதி என்ற பாரசீகப் புலவன் ஒருவன் பல நாடுகளையும் சுற்றித் தாய்நாடு திரும்பினான். அவனுடைய நாடு அப்போழுது உருக்குலைந்திருந்தது. ஷிராஸ் என்ற அவன் பிறந்த இடத்திற்கு வந்தான். அப்போழுது ஷிராஸ்

பேரும் பாலைநிலமாகக் காட்சியளித்தது; என்றாலும் சோர்க்கம் என்று ஒன்று உண்டானால் அது ஷிராஸ் நகரம் ஒன்றுதான் என்றான். தாய்நாடு, தன்னுடைய நகரம் என்பதில் மனிதனுக்கு அவ்வளவு பற்று இருக்கிறது. அதைப்போல் நம் மொழியில் நமக்குப் பற்று உண்டு. பற்றில்லாத தமிழன் வாழமுடியாது. பற்றில்லாதவனும் பற்றில்லை என்று தமிழில்தான் சொல்லுகிறான். கடவுள் இல்லை என்பவன் ஏதோ ஒன்றை இருக்கிறதென்று நினைத்துத்தான் இல்லை என்கிறான்.

தமிழின் தனிப்பேருமை அது. மற்ற மொழிகளோடு தமிழை ஒப்பிட்டுப் பார்த்தால் இறையுணர்வு தரும் மொழி தமிழ் ஒன்றுதான். மற்ற மொழிகளில் இவ்வளவு ஆழமான மெய்ஞ்ஞான இலக்கியங்கள் இல்லை. புறநானூற்றிலிருந்து பாரதியார்பாடல்வரை மரபு காக்கப்பட்டுவந்துள்ளது. பரிபாடல், திருமுருகாற்றுப்படை இவற்றைக் கற்போர் தெய்வநிலை பேசப்படுவதை உணரலாம். மற்ற மொழிகளில் எளிதில் பேச முடியாத இறையுணர்வுகள் அற்புத வடிவுபெற்றுத் தமிழில் உள்ளன.

இறைவனை நம்மாழ்வார் '' சோல் நலங் கடந்த போருள் '' என்றார். வேதம் கோஷமிட்டு இறைவனைத் தேடிச் செல்கிறது. தொல்லைமூல்ப்பரஞ்சுடர் வேதத்தின் பின் செல்லும் என்றார் நம்மாழ்வார். அது தமிழிலே உள்ள மெய்யுணர்வுப் பாடல்களுக்கெல்லாம் பொருந்தும். இறையுணர்வைப்பற்றி தமிழன் ஓரடி பாடத் தொடங்கிவிட்டால் இறையுணர்வு நிரம்பி நிற்கும். இவற்றை யெல்லாம் தமிழ்ப்பற்றின் காரணமாகச் சொல்லவில்லை. பிற மொழியை உணர்ந்தே கூறியது. மணிவாசகர் '' அப்பார் சடையப்பன் அப்பாலைக் கப்பாலான் '' என்றார். இதை யெல்லாம் காணும்போது தமிழில்தான் இறையைப் பாட முடியும் என்று தோன்றுகிறது. '' ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கோட்டேமோ'' மணிவாசகர்.

இன்று ஆவணி மூலம். ஆகவே இன்று மாணிக்கவாசகரை எண்ணுவது நம் கடமை. மரபும் வரலாறும் மணிவாசகரைப் பற்றிக் கூறுகின்றன. திருப்பெருந்துறையில் இறைவன் மணிவாசகரை ஆட்கொண்டான் என்று வரலாறு கூறுகிறது. தில்லை,

தோணிபுரம், திருவண்ணுமலை சென்று பின் இறைவனோடு கலந்தார் என்பது மரபு. இதை நாம் ஏற்றுக்கோள்கிறோம். ஏற்றுக் கொண்டு திருவாசகம் என்னும் பக்திப் பேருங்கடலில் நுழைகிறோம். இங்கே எல்லா வகையிலும் கட்டுண்டு கிடக்கும் ஒரு சிறு உயிர் அலகில்லாத ஆற்றல் கருணை உடைய பெருமானை நோக்கிப் பயணத்தைத் தொடங்குகிறது. அந்தப் பயணம் எப்படிச் சொல்வடிவம் பெறும் என்றும் அறுதியிட்டு மணிவாசகர் கூறியுள்ளார். இலக்கணத்திற்கெல்லாம் இலக்கியமாகத் திகழ்வது திருவாசகம். திருப்பெருந்துறை ஒரு படி. தோணிபுரம் ஒரு படி. மாணிக்கவாசகர் இறையருள் பெற்று இறைவனுடைய கருணையால் பிறப்பேடுத்து பின்பு இறைவன் கருணையாலேயே மீண்டார் என்று கூறுகிறது. இறைவன் தன்னுள்ளத்தில் உள்ளான் என்றுணர்ந்தவர் மாணிக்கவாசகர். இதையெல்லாம் எண்ணிப் பாடினார் என்பது மரபு. மாணிக்கவாசகர் சாதாரண உயிரைப்போன்று துன்புற்றார் என்பது நம்போன்றார்க்குப் பொருந்தாது. மன் சுமந்து பிட்டுண்டு பாண்டியன் பிரம்பால் அடிபட்டான் என்றால் அதனால் சொக்கநாதனுக்கு ஏதாவது குறைவு உண்டா? அதுபோன்றதே மாணிக்கவாசகர் நிலையும். உண்மையான அன்போடு மாணிக்கவாசகர் பாடல்களை நாம் பாட முற்பட்டால் நம்மைப்போன்ற உயிர் இறைவனை நோக்கிப் பயணம் செய்கின்றதை அறிவோம்.

உம்பர்கட்காரசே யோழிவற நிறைந்த
யோகமே யூற்றையேன் றனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழுதாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
சேம்பொருட் டுணிவே சீருடைக்கழலே
சேல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

என்று மாணிக்கவாசகர் கூறுகிறார் தான்மட்டும் உய்ய விரும்பினால் இப்பாடலை அருளியே இருக்கமாட்டார். நம்முடைய உய்வை எண்ணியே மாணிக்கவாசகர் திருவாசகத்தை அருளினார். திருப்பெருந்துறை ஓர் படி. இங்கே இருந்து உயிர் வானத்தை நோக்குகிறது. ஏன் கிட்டவில்லை என்று எண்ணுகிறது. இறைவன் உண்டு என்று எண்ணி இறைவன்பால் நம் அறிவைத் திருப்புவது மெய்ஞானத்தின் முதற்படி என்று கூறுகிறார்கள். சத்தியம் எங்கே உள்ளது என்று உயிர் தேடி

அலைகிறது. இறைவனை நோக்கித் திரும்புகின்றேன் என்று எளிதில் சொல்லிவிடலாம். அவர்களுடைய அருள் ஒளியிலே ஒரு சிறிதாவது கிடைக்காதா என்று ஏங்குகின்றேம். இதற்கு மனம் ஒரு தடையாக உள்ளது.

தாயினும் சாலப்பரிந்து இறைவன் மாணிக்கவாசகரை ஆட்கொள்கிறது. தில்லையிலும் பிற இடங்களிலும் மாணிக்க வாசகர் பாடும்போது வேறு நிலையிலே பாடுகின்றார். தும்பியைப் பார்த்துப் பாடுவது போல நம்மைப் பார்த்து மணிவாசகர் பாடு கிறார். " நினைத்தோறும் பேசுந்தோறும் காண்டோறும் " இந்த உள்ளம் அமைதியால் நிறைந்துள்ளது. குயில் சோலையிலே கூவுகிறது. மாணிக்கவாசகர் குயிலைப் பார்த்து " ஊன்பழித்து உள்ளம் புகுந்து என் உணர்வதாய ஒருவன் " என்று பாடு கிறார். குயில் தனக்கே வரவேண்டும் என்று கூறுகிறது. மணிவாசகர் ஆனந்தவியப்பில் " சங்கரா யார் கோலோசதுரர் " என்று பாடுகிறார்.

உம்பர்கட்கரசே ! உனக்கும் எனக்கும் உள்ள தோடர்பு அநாதியானது. உன்கழல் வணங்கும்பேற்றை அளித்தாய் என்று இறைவனைத் தம் நெஞ்சில் ஆட்படுத்தி வைத்துக்கொண்ட எண்ணத்தோடு பாடுகின்றார். மாணிக்கவாசகர் மக்களைப்பார்த்து திருவெம்பாவையில் " ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி " என்று பாடி, இறைவனைக் காண அல்லவா உனக்கு வாட்டடங்கண்ணை அளித்துள்ளான். இதை அறியாமல் துயில லாமோ ? என்கிறார். இந்தப் பாடல் மனிதர்களை அழைப்பது போல் இருக்கிறது. இது மரபை ஒட்டியதோ என்பதை அறியேன். இறைவன் அருளைப்பெற்று அவனுடைய அருமை, பெருமை, தன்மைகளைப் பாடுகின்றேம்.

" ஏதவனூர் ஏதவன்பேர் யாருற்றார் யாரயலார் " என்று ஏக்கத்தோடு நிற்கின்ற நிலை. அடுத்தகணத்திலேயே சிவானுபவப் போய்கை அவன் அருளால் தோன்றுகிறது.

சிவானுபவ அருள் கிட்டிவிட்டது. " நீயாட்கொண்டருளும் விளையாட்டின் உய்வார்கள் உய்யும்.....கழல் பாடி " நிற்பதே நாங்கள் விரும்புவது என்று மணிவாசகர் பேசும்போழுது செந்தமிழ்க் குரல் நம் காதில் ஒலிக்கிறது. இக்குரல் உங்கள் நெஞ்சிலும் செவியிலும் ஒலிக்க விடைபெறுகின்றேன். குருமகாசந்நிதானம் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் வணக்கத்தைக் கூறிக் குருமகாசந்நிதானத்தை வாழ்த்தி வணங்கிப் பெரியோர்களையும் வணங்கி விடைபெறுகின்றேன்.

வள்ளுவன் வழி

திரு T. S. புருஷோத்தமன் அவர்கள், பேங்களூர்.

(மலர் 19, இதழ் 9, பக்கம் 511 இன் தொடர்ச்சி)

கதிரவனின் மறைவால் காணும் இருள் இயற்கை. மதியின் மறைவால் காணும் இருள் செயற்கை. இவ்விருள் அளிப்பது அலை அலையான துன்பம். அவ்வருள் அளிப்பது நிலையான இன்பம். பேரின்பம் எனப்படுவதும் அதுவே. ' அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை ; அல்லல் அருளாள்வார்க்கில்லை ; அருட் செல்வம் செல்வத்துட் செல்வம் '.

'' அருள் சேர்ந்த நெஞ்சினுர்க்கில்லை இருள்சேர்ந்த
இன்னு உலகம் புகல் ''

'' பொருளற்றுர் பூப்பர் ஒருகால் அருளற்றுர்
அற்றுர் மற்றுதல் அரிது ''

என்ற அறம் நிறைந்த சொற்ருெடர்கள் பொய்யாமொழியன்ருே ? மானிட உள்ளம் படைத்த நாம், ஆறறிவு படைத்த நாம் நம்மை அடக்கும் சக்தி இழந்துள்ளதால் எப்போழுதும் தீயவழியிலேயே செல்வதில் நம் புலன்கள் இன்பம் காண்கின்றன. இதுபற்றித் தான் மணிவாசகர் ' மாறிநின்று என்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்து ' என்று கூறினுர்போலும். இச்செயற்கை இருளை ஆக்கவும் அழிக்கவும் முடியும். ஆனுல் அழித்தலைவிட ஆக்க வும் அதைக் காக்கவும் நாம் முனைவதும் இயற்கை. இவ்விருளை அகற்ற, அழிக்க விரும்புவது, விரும்பத் தூண்டுவது வள்ளுவர் செயற்கரிய செயல். இதுவே வள்ளுவரின் செம்மையான வழி.

மக்கள் மக்களாக வாழ விரும்பினுல், இருள் வலையில் சிக்காமல் அருள் மலையைக் காண விரும்பினுல், வள்ளுவன் மறையை ஒளியளிக்கும் விளைக்கருவியாகக் கொள்ளவேண்டும். அறிவின் இருளை ஒழிக்கும் குறள் நிலவில் இவ்வைய மக்கள் உலவவேண்டும். இவ்வெண்ணிலவின் ஒரு கதிரில் (Ray) பொதிந்துகிடக்கும் திண்மையான கருத்தைக் காணலாம்.

'' அடல்வேண்டும் ஐந்தன் புலத்தைவிடல் வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு ''

ஆழ்ந்த கருத்துப் பதிந்த அழகான குறள். ஆராய்ந்தோர்க்கு

அமுதினும் இனிய சுவையை அறிவிற்கு அள்ளி அளிக்கும் குறள். இதை நன்கு உணர்ந்து ஐம்புலன்கள் தங்கள் இச்சைப் படி இன்பம் காணுவதை அடக்கி, அந்நிலையிலா இன்பத்தைக் கனவிலும் காணுது மடக்கி, அறிவு அவ்வழியில் செல்லாது ஒடுக்கி மனத்துக்கண் மாசிலனுய்,

" பற்றுக பற்றற்றுன் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு "

என்று வள்ளுவர் வழியிற் சென்று அரிய மறைகளாலும் அறிய இயலாத இறைவனை அண்டும் தொண்டர்களாவோம்.

" பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்ருர் நீடுவாழ் வார் "

என்று வள்ளுவர் கூறுவது மேற்குறிப்பிட்ட கருத்திற்குத்தக்க சான்று. உண்மையில் ஐம்புலன்களை அடக்கி ' நின்ருலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் மன்ருடும் மலர்ப் பாதத்தை மனத்தாமரையில் வைத்து

" உற்ருரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்ருரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்ருலத்து அமர்ந்து உறையும்கூத்தா உன்குரைகழற்கே
கற்ருவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே "

என்று ஓர் ஞானச்சுடர் பண் இசைத்ததைப்போன்று கருணை வடிவாய சுடவுளைக் கருத்திலமைத்துக் கசிந்துருகி வழிபட்டால் கண்ணினைக் காக்கும் இமைபோல் திண்ணிய அன்பு வாய்ந்த அடியவரை ' ஏழிசையாய், இசைப்பயனுய் இன்னமுதாய் " இருக்கும் இறைவன் அருள் காக்கும் என்பது இலக்கிய உண்மை. இதற்குச் சான்று, ' தந்தையோடு தாய் இன்றித் தனிக் கூலியா ளாகவந்த எனக்கு ஒருதாயாய் ' என்று பிட்டுக்கு மண் சுமந்து ' பித்தா பிறைசூடி ' என்று போற்றப்படும் பெருமான் தன்னைத் துதித்த அம்மையை அழைத்து அக்கிழவியின் ஆணையைப் பூர்த்திசெய்தான் என்று இலக்கியம் பேசுவதிலிருந்து நன்கு புலப்படும். இதை மனத்திற்கொண்டு ஐம்புலன்களை அடக்கி ஆண்டவனை அஞ்சலி செய்யும் இவ்வேளிய இடர்கள் அற்ற அறநெறியில் சென்ருல் நாம் கவலையற்று இம்மையிலே பேரின்பமும், புவியிலே அழியாப்புகழும் மறுமையிலே ' தனக்குவமை இல்லாதான் தாள் ' சேர்வோம் என்பது திண்ணம். அடுத்து,

" அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது "

என்ற குறள் நம் உள்ளத்தில் ஒலிக்கின்றது. அதன் பொருளைச் சிறிது சுவைக்க நம் சிந்தனையைத் தூண்டுவோம். ' அறவாழி ' எனில் அறக் கடல் என்பது பொருள். " அறம் " என்ற சொல் அறு என்னும் முதனிலையடியாகப்பிறந்து தீவினையை அறுப்பது என்று ஒரு தமிழ்ப்பேருவள்ளல் கூறினர். அடியாரின் பாவங்களை அறுத்து வீடுபேறுபேறும் அருளை அளிக்கும் ஆற்றலுடையதால் சிவனை ' அரன் ' என்று அறிஞர் அழைத்தனர்.

' அறம் ' என்பதற்குப் பொதுப்பொருள் அறனறிந்த முத்த அறிவுடைய நம் ஆன்றோர்கள் ' நன்று ' என்று கூறிப்போந்த நற்காரியங்கள் பல நாளும் புரிவதே அறம். இதன் சிறப்புப் பொருள் ' தருமம் ' எனப்படுவது. தருமம் தலைகாக்கும். அறம் செய்ய விரும்பு என்று ஆத்திசூடியும் அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை என்று வேத நூலும் ' சிறப்பு ஈனுஞ் செல்வமும் ஈனும் ' அறத்தைக் குறித்து விளக்கியுள்ளன அல்லவா ? அறமே அவை அனைத்தும் அளிக்குமென்றுல் அறக் கடல் அருள் மழையாக மாறி இம்மாநிலத்தில் தோன்றிய மனிதப் பயிர்களுக்கு அளிக்கும் பயனை நம் அறிவால் அளவிடற் கெளிதோ ?

' அறம் ' என்றதும் நம் அறிவுத்திரையிலே மெய்ப்பொருள் கண்ட தொண்டர்களும், சங்ககாலப் புலவர்களும் தோற்றமளிப் பார்கள். அறத்தை உயிராகவும் அன்பை உடலாகவும் கொண்ட நம் தமிழ்த்தாயின் தொண்டர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்கா. தன்னலம் கருதாது, தவ உள்ளமும் தியாக சிந்தையும் கொண்ட இத் தவப்புதல்வர்களைக் குறித்த வரலாறுகள் பல புராணங்கள் சில. இப்புராணங்களிலே தலையாய சிறப்புடன் போற்றப்படுவதும் சொல்லுக்குச் சொல் இனிமை சொட்டும் ' சீகாளத்திப் புராணத்தில் ' ஏற்றத்துடனும் தோற்றத்துடனும் குறிப்பிடப்பட்டுள்ள கண்ணப்பரின் அன்பில் உருவான அறத்தை சிவப்பிரகாச சுவாமிகள் வாக்கால் காணலாம்.

(தொடரும்)

செல்வம்

வித்துவான், திரு. ம. சிவசம்பு அவர்கள்
தமிழ்ப் பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

(மலர் 19 இதழ் 9 பக்கம் 515 இன் தொடர்ச்சி)

செல்வம் நிலைக்கவழி :

செல்வம் சேர்க்கவும், காக்கவும் குறையாதிருக்கவும் தெரிந்துகொண்ட நாம் அதை நிலைக்கச் செய்யவும் வழியறிய வேண்டாமா? செல்வம் நிலைக்கவேண்டுமானால் நாம் செய்ய வேண்டிய செயல்களும், மேற்கொள்ளவேண்டிய பண்புகளும் பல உண்டு. நாம் மேற்கொள்ளவேண்டிய செயல்களை முதலில் காண்போம். பொருளைப்பெற்ற நாம் பிசினைகை இருத்தல் கூடாது. பொருளைக்கொண்டு, அறம் முதலிய நன்மைகளைச் செய்யவேண்டும். செய்யவேண்டியவற்றைச் செய்யாது காக்கும் பொருள் நிலைக்கும் தன்மையின்றிக்கெடும்.

" செயற் பால செய்யா திவறியான் செல்வம்
உயற் பால தன்றிக் கெடும், "

செய்யவேண்டிய நன்மைகளையும் காலதாமதம் செய்யாமல் எக்காலத்தில் எதைச் செய்ய வேண்டுமோ அக்காலத்திற் கேற்ப அதைச் செய்துவிடவேண்டும். அதுவே செல்வத்தை நீங்காமல் கட்டும் கயிறு ஆகும். குறித்தகாலத்தில் காரியத்தைச் செய்து வெற்றி பெறுவதால் செல்வம் நீங்காமல் நிற்கிறது என்பதையும் கூறுகிறார் வள்ளுவர்.

' பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு "

பொருள் நிலைக்கவேண்டுமானால் நாம் பொறையுடைவர்களாக - நடுநிலைமை உடையவர்களாக - கடுஞ்சொல் சொல்லாதவர் களாகக் கண்ணோட்டம் உள்ளவர்களாக இருக்கவேண்டும். நமக்காக ஒரு காரியத்தைச்செய்ய வல்லவனிடத்தில் நம்பிக்கை உள்ளவர்களாக நாம் இருக்கவேண்டும். நம்மிடம் வேலை செய் பவர்களிடமும், நண்பர்களிடமும் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கவேண்டும். அவநம்பிக்கை கொள்ளக்கூடாது. பிறரை

நம்பாமல் அவநம்பிக்கை கொள்வோமாகில் திருமகள் நம்மை விட்டு நீங்குவாள்.

" வினைக்கண் வினையுடையான் கேண்மை வேருக
நினைப்பானை நீங்கும் திரு "

பிறரை நம்பினால் மட்டும் போதாது. நடுநிலைமை தவறக் கூடாது. நடுநிலைமையோடுதான் பொருள் சேர்க்கவேண்டும். தீது இல்லாமல் நன்மையே பயந்தாலும் நடுவு நிற்றலை ஒழிதலான் உண்டாகின்ற ஆக்கத்தை அப்பொழுதே நீக்கிவிட வேண்டும். நடுவுநிலைமை உடையவனது செல்வமே நிலைத்து நிற்கக்கூடியது. அச்செல்வமே நடுநிலைநின்றவன் வழியில்வந்த வர்களுக்கும் பயன்படும். நடுநிலைமையான் வந்த செல்வமே நன்மை பயப்பதும் அழிவின்றி நிலைத்து நிற்பதும் ஆகும்.

" செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கோமாப் புடைத்து "

நடுநிலைமையோடு வந்த செல்வத்தை நீங்காமல் நிலைக்கச் செய்ய வேண்டுமானால் போறையுடைமை வேண்டும்.

" நிறை யுடைமை நீங்காமை வேண்டின்
போறையுடைமை போற்றி ஒழுகப்படும் "

நாம் இரக்கம் உள்ளவர்களாக, இன்சொல் கூறுபவர்களாக இருக்கவேண்டும். இதை விடுத்து கடுஞ்சொல் கூறுபவர்களாக, கண்ணோட்டம் இல்லாதவர்களாக இருந்தால் நம்முடைய நிறைந்த செல்வமும் நிலைக்காமல் கேட்டுவிடும்.

" கடுஞ் சொல்லன் கண்ணிலனாயின் நெடுஞ்செல்வம்
நீடின்றி ஆங்கே கெடும் "

பொருள் வைக்கும் இடம்:

இவ்வளவு தூரம் காத்து நிலைக்கச் செய்த செல்வத்தை வைக்கும் இடம் பாங்கிகளா — அல்லது உண்டியா — இருப்புப் பேட்டியா — இல்லை, பின் எங்குதான் பொருளை வைப்பது. ஏழைகளின் வயிறுகிய பண்டாரத்தில் போட்டுவையுங்கள். வறியவர்களின் பசித்துன்பத்தைப் போக்கவேண்டும். ஆதுவே பொருள்பெற்ற நாம் அப்பொருள் நமக்குத் தக்க சமயத்தில் உதவுமாறு சேர்த்துவைக்கும் இடமாகும்.

" அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதோருவன்
பெற்றருன் பொருள வைப்புழி".

(தொடரும்)

திறன் ஆய்வு:

தருமையாதீன வெளியீடுகள்

வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர்
தமிழ்ப்போராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி. தருமபுரம்.

(மலர் 19. இதழ் 9. பக்கம் 498 இன் தொடர்ச்சி)

எண் 12. திருவையாற்றுப் புராணம்

இயற்றியவர்: ஞானக்கூத்தர். வெளியிட்டோர்: 23ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமண்ய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆணைப்படி ஆதீன வித்துவான் திரு. மு. ரா. அருணாசலக் கவிராயர் அவர்களாலும் திரு. ப. அ. முத்துத்தாண்டவராயப்பிள்ளை அவர்களாலும் பார்வையிடப் பட்டுத் திருவையாறு தேவஸ்தானக் கட்டளை விசாரணை ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் வெளியிடப் பட்டது. 1930.

ஞானக்கூத்தர்: இவர் நிரம்ப அழகிய தேசிகருடைய மாணவர். சிவப்பிரகாச தேசிகர் என்பது இவருடைய பெயர். விருத்தாசலபுராணம் திருவையாற்றுப்புராணம் முதலியன இவர் இயற்றியவை. இவரது ஊர் சிவன்பாக்கம் என்னும் ஊர். துறையூராதீனத்தைச் சார்ந்தவர் இவர்.

திருவையாற்றுப்புராணம்: திருவையாற்றுப் புராண மான்மியத்தை வடமொழியிலிருந்து தமிழாக்கம் செய்தார் நிரம்ப அழகிய தேசிகர். அவர் மாணவர் ஞானக்கூத்தரும் பதிகச் சருக்கம், அகத்தியச் சருக்கம் முதலிய 12 சருக்கங்களை 437 பாடல்களால் தமிழில் பாடினர். இந்நூற் சிறப்புக்கு உரைகல்லாக விளங்கும் பகுதி; 6 வது சருக்கம் 66 ஆம் பாடல் முதல் 70 ஆம் பாடல் முடிய உள்ளவை. பதினாறு பேறுகள் என்பவை சிவபூசை முடிவில் சைவர்கள் வேண்டும் பிரார்த்தனை.

"மறைகள் நிந்தனை சைவநிந் தனைபோருமனமும்
தறுகணம்புல னேதனக் கேவல்செய்சதிரும்
பிறவிதீதெனுப் பேதையர் தம்மோடுபிணக்கும்
உறுதி நல்லறம் செய்பவர் தங்களோடுறவும்"

சிலாசமுனி சருக் - 66.

இவைபோன்ற பதினறு பேறுகளைவேண்டித் தெளிவாகப் பாடியிருக்கிறார் ஆசிரியர். பன்னிரு சருக்கங்களும் உரை நடையிலும் எழுதப் பேற்றுள்ளன. பாடல்கள் மிக எளிய ஆற்றொழுக்கான நடையில் அமைந்தவை.

எண் 13. சிவானந்த போதசாரம் உரையுடன்

இயற்றியவர்: தருமையாதீன அடியவர் ஸ்ரீ சிவானந்த முனிவர். வெளியிட்டோர்: 23 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆணையின்படி சீகாழி, வித்துவான், திரு. முத்துத் தாண்டவராயப் பிள்ளை அவர்களால் பார்வையிடப்பெற்று கார்பார் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகளால் பதிப்பிக்கப்பட்டது. 1931.

சிவானந்த முனிவர்: இவர்தம் வரலாற்றுக் குறிப்பு சம்பிரதாயதீபம் என்ற வெளியீட்டுக் குறிப்பில் முன்பே எழுதப் பேற்றுள்ளது.

சிவானந்த போதசாரம்: இந்நூல் 70 அடிகளை உடைய ஆசிரியப்பாவால் அமைந்தது. தசகாரியங்களை 30 அவதாரத்துள் வைத்துச் சிவபோகத்தைத் தெள்ளிதின் உணர்த்துவது. முத்திச்சகலம், பூதப்பழிப்பு, போறியறவுணர்தல், அந்தக்கரண சுத்தி கலாதி ஞானநிராகரணம், சுத்த தத்துவ தூடணம், பிராணவாயு நீக்கம், கேவலம், கேவலநிலை, திரோதானம் இச்சை, கிரியை ஞான சத்திகளின் தரிசனம், ஞானுதீதம், ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், பரைதரிசனம், பரையில் வியாத்தி, பரையோகம், பரைபோகம் ஆன்மசுத்தி, சுகரூபம். சுகாதீதம், சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம் சிற்பரானந்த தரிசனம், சிற்பரானந்தயோகம், உலகப்பழிப்பு என்ற முப்பது அவதரங்கள், தசகாரியத்துள் அடங்கும் நிலை முதலியன சொல்லப்படுகின்றன.

எண் 14. சோடசகலாப் பிராசாத ஷட்கம்

இயற்றியவர் : ஆதீன முதற்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர். வெளியிட்டோர் : 23 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆணையின்படி வேளூர் திரு. சோமசுந்தர தேசிகர் அவர்கள் எழுதிய முகவுரையுடன் சீகாழி. திரு. முத்துத் தாண்டவராயப்பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டது. 1931

ஸ்ரீ குருஞானசம்பந்தர் : இவர்களுடைய வரலாறு முன்பே தெரிவிக்கப்படடிருக்கிறது.

சோடசகலாப் பிராசாத ஷட்கம் : யோக நெறிக்கு இந்நூல் மிகச் சிறந்த நூல். பிரா - சிவஞானம். ஸா - கதி. தம் - தருவது. பிராசாதம் - சிவஞான கதியாகிய மோட்சத்தைத் தருவது என்னும் பொருளுடையது. பிராசாதத்தைத் தரும் மந்திரத்தின் பெருமையையுரைப்பது இந்நூல். ஷட்கம் - ஆறு பாடல்களை உடையது என்னும் பொருளுடையது. ஷோடச கலைகள் - பதினாறு கலைகள். பிராசாதம் கலாபேத வகையால் பஞ்சகலாப்பிராசாதம் அஷ்டகலாப் பிராசாதம் நவகலாப் பிராசாதம் துவாதசகலாப் பிராசாதம் சோடசகலாப் பிராசாதம் என ஐந்து வகைப்படும். அகாரம், உகாரம், மகாரம், விந்து, அர்த்தசந்திரன், நிரோதினி, நாதம், நாதாந்தம், சக்தி, வியாபினி வ்யோமரூபினி, அநந்தை அநாதை, அநாசிருதை, சமனை, உன்மனை என்னும் பதினாறு கலைகளின் இயல்புகள் இந் நூலில் விரித்துரைக்கப்படுகின்றன. இக்கலைகள் நாபிமுதல் தலைக்குமேலும் பன்னிரண்டங்குலம் இருந்து விளங்கும்.

இந்நூலில் கூறப்படும் சோடச கலாப்பிராசாதத்தினைக் குருவருளால் பேற்று ஒன்றிரண்டு மூன்று முதலிய கலைகளிற் பயில்வோர் ஒருவர் இருவர் தனித்தும் சேர்ந்தும் பதினாறு கலைவரைப் படிமுறையாய் இருந்து நிட்டை புரிந்த இடமே தருமைத் திருமடத்துள் சோக்கநாதர் பூசை மடத்தின் பின் புறத்திலமைந்த பதினாருறுப்பக்கமாகும்.

இந்நூல் குருமுகமாகக் கேட்டுப் பயிலுதற்குரிய நிலை களைக் கூறுவது. பதினாறு சீர்க்கழிநேடிலடிலாசிரிய விருத்தமாய்

அமைந்தது. ஆறு சேய்புட்களை உடையது. வடமோழியில் அமைத்த பிராசாதஷட் சுலோகி என்னும் நூலின் மோழி பெயர்ப்பாயமைந்தது. இந்நூலில் ஏழாவது பாடல் ஆறு பாடல்களில் சொல்லப்பட்டவற்றிற்குச் சூனியம் மட்டும் கூறுவதால் நூலுள்ளமைந்ததன்று. இந்நூலில் ஒவ்வோரு கலைகளின் தன்மை, தானம், அளவு வடிவு, தேவதை, குணம், மலரிலை, முதலியன வினக்கப்பட்டுள்ளன.

எண் 15. சனசந்யாச பத்ததி (வடமொழி)

இயற்றியவர் : சிவாக்ரயோகீந்திர ஞானசிவாசாரிய சுவாமிகள். வெளியிட்டோர் : 23 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆணைப்படி போலகம் திரு. ஸ்ரீராமசாஸ்திரிகள் தருமை திரு. ஸ்ரீநாராயண சாஸ்திரிகள், ஆகியோரால் பரிசோதிக்கப்பேற்று ஒடுக்கம் ஸ்ரீமத் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகளால் வெளியிடப்பட்டது. 1932.

சிவாக்ரயோகிகள் : சீகண்ட பரசிவத்தின்பால் அருள் பேற்றவர்கள் ஸ்கந்தர் முதலியோர். அவர்களில் ஸ்கந்தரைப் பின்பற்றிய பரம்பரை ஸ்கந்த மரபு எனப்படும். இன்றைக்குச் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன் சூரியனார்கோயில் ஆதீனம் மகாசந்நிதானம் ஸ்ரீ சிவக்கொழுந்து சிவாசாரியார் அவர்கள் சூரியனார்கோயிலில் திருமடம் நிறுவி முதற்பேரூங் குரவராய் எழுந்தருளியபோது அவர்களை இச்சிவாச்சாரியார் அடைந்து தீட்சை பேற்றனர் - சிவாக்ரயோகி என்ற தீட்சா நாமத்தையும் பேற்றனர். இவர்கள் இருவரும் குருவும் சீடருமாய் எழுந் தருளியிருந்த காலத்து தஞ்சையரசன் சின்னச் செப்பையாச்சுதர் அழைப்பிற்கிணங்கித் தஞ்சை சென்றகாலையில் தன்னோடு சமயவாதம் புரிந்த மணவாள மாமுனி என்றவரைத் தோற் றோடச் செய்தார். பின்னர் ஒருகால் சைவத்துறவியர்க்கும் ஸ்மார்த்தத் துறவியர்க்கும் விளைந்த வேறுபாடுகளை நீக்க அம்மன்னன் உணருமாறு இந்நூலைச் செய்தார்கள். காலம் கி. பி. 1444 - 1538. இவர்கள் செய்த வேறு நூல்கள் சங்கிர விளக்கியரனம், சிவசுக்ரயாஷ்டியம், கிரியாதீபிகை முதலியவை.

சைவசந்நியாசபத்ததி : சைவர்களுக்கும் சந்நியாச ஆச்ரமம் உண்டு என்பதை ஆகம நூல்களின் ஆதாரங்களைத் துணைக்கொண்டு இந்நூலாசிரியர் நிறுவியுள்ளார். கடவுள் வாழ்த்துக் கூறியபின் அரசனைச் சிறப்பித்தும் பாயிரம் செய்துள்ளார். பின்னர் ஆகமத்தோற்றம் கூறிச் சைவ சந்நியாசிகட்குரிய தியானம், சௌசம், தந்ததாவனம், ஆசமனம், ஸ்நானம், விபூதி, உருத்தாரக்கதாரணம், சந்தியாவந்தனம் பிராசாத பேதம், மூலமந்திர செபம் முதலிய நியமங்களையும்; இரண்டாம் படலத்தில் புட்பவிதி சாங்கமான சிவபூசாக்கி மங்களையும்; மூன்றும் படலத்தில் தகர வித்தியோபாசனை சைவசித்தாந்த சிரவணம், யோகவிதி பஞ்சாக்ஷர பேதம், பஞ்சாக்ஷரசெபவிதி, செபபலன்களையும்; நான்காம் படலத்தில் பிக்ஷை ஏற்கும் முறை, பிக்ஷாபேதம், பிக்ஷாநிவேதனம், பிக்ஷா போஜனம் சாஸ்திர சிரவணம், அசபா மந்திர செபாதிகளையும்; ஐந்தாம் படலத்தில் சாதுர்மாஸ்ய விரத விதியையும்; ஆறும் படலத்தில் சாக்ஷ ஷ்யாதி தீக்ஷாபேதம், தீக்ஷாதிகாரம, சிஷ்யபரீக்ஷை, சமய விசேஷ நிர்வாண தீக்ஷை திருவடி தீக்ஷை, ஸ்ரீ பஞ்சாக்ஷரத் திரிபதார்த்த ஞானோபதேசம், ஆத்மார்ப்பணம், தீக்ஷா காலம் முதலியவைகளையும்; ஏழாம் படலத்தில் சைவசன்னியாசாதிகாரிகள், திரைவர்ணிகர்கட்குஞ் சைவ சன்னியாச முடைமை, சீவசிரார்த்த விதி, சடாதாரண விதி மூன்று வித சைவ சன்னியாச பேதம், ஆசார்யாபிஷேக விதி, ஸ்மார்த்த சந்நியாசிகட்கு ஆசார்யாபிஷேக விலக்கு, ஆசார்ய லக்ஷணம், சாதகாபிஷேக விதி முதலியவைகளையும் எட்டாம் படலத்தில் சைவசன்னியாசிகள் விதேக முக்தி எய்தும் காலத்து அனுஷ்டிக்கும் முறை, சிவசரீராதன சிவிகாரோகண கிராமப் பிரதக்ஷண கனனசமாதி விதி அவ்விடத்துச் சிவலிங்கப் பிரதிஷ்டை, ஆலய நிர்மாண நித்ய, நைமித்திக பூசாவிதிகளையும் அமைத்து நூலை முடித்திருக்கின்றார்.

எண் 16. சிவபோகசாரமும் சொக்கநாத வெண்பாவும்
(ஆங்கில மொழி பெயர்ப்புடன்)

இயற்றியவர் : ஆதீன மூதற்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள். வெளியிட்டோர் : ஆங்கில மொழி பெயர்ப்புடன் 23 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரியசுவாமிகள் 1932. 24ஆவது மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக பரமாசாரியசுவாமிகள் 1936. 25ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரியசுவாமிகள் அவர்கள். முன்றும்பதிப்பு 1950. நான்காம் பதிப்பு 1953. ஐந்தாம் பதிப்பு 1953.

ஸ்ரீ குருஞானசம்பந்தர்: இக்குருமூர்த்திகளுடைய வரலாறு முன்பே எழுதப்பெற்றுள்ளது.

சிவபோகசாரம்: கண்ணுதலும் கண்டக் கறையும் கரந் தருளி மண்ணிடையில் பேருமான் மானைக் காட்டி மானைப் பிடிப்பது போலவும் மீனைக் காட்டி மீனைப் பிடிப்பது போலவும் மக்களை நல்வழிப்படுத்தித் தன்னடி சேர்விக்கும் பெருங்கருணை யால் மானுடச் சட்டை தாங்கிவருகின்றான். அங்ஙனம் குருவாய் எழுந்தருளிய பெருமானே ஸ்ரீ குருஞானசம்பந்தப் பெருமான். சிவபோகத்தைத் தாமும் நுகர்ந்து பிறர்க்கும் அறிவிக்கும் பெருங்கருணையை காகம் உறவு கலந்து உண்ணக் கண்டீர் அகண்டாகார சிவபோக வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரண மாய்க் கிடக்குது ஐயோ கலந்துண்ணச் சேரவாரும் சேகத்தீரே என்று தாயுமானார் அழைப்பது போலக் குருஞானசம்பந்தப் பெருந்தகையார் அன்பரை அறைகூவி அழைத்துச் சிவபோகப் பேரின்பத்தை இந்நூலுள் காட்டியுள்ளார்கள். பதினேண் சித்தர் பாடல் என வழங்கும் ஞானக்கோவையுள்ளும் இந் நூல் பண்டுதொண்டே மக்களால் பயின்று வரப்படுகிறது. குருநாதரைச் சிவமாகவே கருதும் சமயமரபை ஒட்டிக் கமலை ஞானப்பிரகாசரைச் சிவமாக வாழ்த்தி அவரருள் பேற்றின்புற்ற நிலையை நூலின் முற்பகுதியில் தெரிவிக்கிறார்கள்.

அவரவருக்குள்ளபடி ஈசனருளாலே
அவரவரைக் கொண்டியற்றுமாலால் — அவரவரை
நல்லார் போல்லாரென்று நாடுவதேன்னெஞ்சமே
எல்லாம் சிவன்செயலென்றெண்.

பரபரக்க வேண்டா பலகாலும் சொன்னேன்
வரவரக் கண்டாராய் மனமே — ஒருவருக்கும்
தீங்கு நினையாதே சேய்நன்றி குன்றுதே
ஏங்கி இளையா திரு.

என்பன போன்ற பாடல்கள் வாழ்க்கையில் என்றும் நினைவில் கொள்ளத்தக்க நீதிகள். 143 பாடல்களைக்கொண்டது இந்நூல்.

சொக்கநாத வெண்பா : கண்ணுக்கினிய போருளாய் விண்ணும் புகழ்ந்திடப் போற்றுமரை வாவியில் குருஞான சம்பந்தர்க்குக் கிடைத்த சோக்கேசனைக் குருமூர்த்திகள் ஆராத காதலால் அருந்தமிழ்ப் பாமலைகள் புனைந்து அணி செய்தார்கள். அத் தோத்திரப்பாமாலையே இந்நூல். 101 வெண்பாக்களைக்கொண்டது.

ஆறுதலை யில்லை யடியேனுக்கன்பாகத்
தேறுதலை சோல்வார் சிலரில்லை — வேறெனக்குத்
திக்காருமில்லை சிவனே பழிக்கஞ்சிச்
சொக்கேநின் தாளே துணை.

இந்நூல்கள் இதுவரை ஆறு பதிப்புக்களாக வெளிவந்துள்ளன. ஆங்கில மொழி பெயர்ப்பு இந்தி மொழி பெயர்ப்புக்களிலும் வெளிவந்துள்ளன.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Sri Sivalokathiagarajaswami Devasthanam,
Achalpuram.

திருப்பூர் அருள்நெறி வார வழிபாட்டுத் திருக்கூட்டத்தாராகிய நாங்கள் 8--8--60 தேதி காலை 9 மணிக்கு இங்கு வந்துசேர்ந்து ஸ்ரீ சிவலோகத் தியாகராஜசுவாமியோடு திருவெண்ணீற்றுமையையும். ஞானசம்பந்தப் பெருந்தகையாரின் பெருமணக்கோலத்துடன் உள்ள ஆலயத்தையும் தரிசிக்கும்பேறு கிடைக்கப்பெற்றதைக் கண்டு பேரும்மகிழ்ச்சி அடைகிறோம். இந்த ஆலயத்திலுள்ள நிர்வாக அதிகாரியும் அதைச் சார்ந்த பல அலுவலர்களும், அர்ச்சகர்களும், ஓதுவாமூர்த்தியும் இதர சிப்பந்திகள் அனைவரும் மிகப் பயபக்தியோடு இந்த ஆலயத்தைச் சிறப்பாக நடத்திவருகிறார்கள். ஆலயமும், விக்கிரகங்களும் நல்ல முறையில் சுத்தமாக வைத்து வருவோர் மனத்தைக் கவரும் வகையில் அமைந்திருக்கிறது. இந்த ஆலய நிர்வாகிகள் அனைவரையும் பாராட்டுகின்றோம். வேணும். சுபம்.

தங்கள் அன்புள்ள.

(ஒ-ம்) காரியதரிசி.

சிற்றிங்கணுடையான்

சிவநேறிச்செல்வர்,
வித்துவான், திரு. கே. எம். வேங்கடராமையா M. A., B. O. L.,
முதல்வர், சேந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

முன்னுரை

ஈங்கா[1] நாட்டின்கண்ணது சிற்றிங்கண் என்னும் ஊர். இச் சிற்றிங்கண் ஊரவன் சிற்றிங்கணுடையான் எனப்பேற்றுன். இவனது இயற்பேயர் கோயில்மயிலை என்பதாம். இவன் இரண்டாம் பராந்தகனுகிய சுந்தரசோழன் காலத்தில் பராந்தகமூவேந்த வேளான் என்று சிறப்பிக்கப்பேற்றுள். ஆகவே இச் சுந்தர சோழன் மகனுகிய ஆதித்தகரிகாலன் கல்வேட்டுக்களில் சிற்றிங்கணுடையான் கோயில்மயிலை பராந்தகமூவேந்தவேளான் என்று குறிக்கப்பேற்றனன். இவன் திருவிடைமருதூர்க் கோயிலுள் ஸ்ரீகாரியம் ஆராய்கின்ற அதிகாரிகளாகத்திகழ்ந்தான்.

ஆதித்தகரிகாலன்[2]

ஆதித்தகரிகாலனை, இரண்டாம் ஆதித்தன் என்பர் ஆராய்ச்சியாளர். 957 முதல் 970 வரை ஆண்ட இரண்டாம் பராந்தகனுகிய சுந்தரசோழனுக்கு இவன் முதன் மகனுவான். இவனது கல்லெழுத்துக்கள் தஞ்சை, திருச்சி, தென்னற்காடு மாவட்டங்களில் கிடைத்துள்ளன; 5 ஆவது ஆட்சியாண்டு வரை காணப்பேறுகின்றன. இவன் "பாண்டியன் தலைகொண்ட கோப்பேருகேசரிவர்மன்" எனப்பேறுகிருன். இரண்டாம் பராந்தகனுகிய

---

[1] இங்கண் நாடு எனினும் ஆம்; அருமொழிதேவ வளநாட்டு இங்கணுடு என்றும் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு இங்கணுட்டு இங்கண் என்றும் ஒரே கல்லெழுத்தில் காணப்படுகின்றமையின் (70 of S. I I. Vol II Part III) இவ்விரு வளநாடுகளுள் ஒன்றின் கண்ணது சிற்றிங்கண் இருந்த இங்கணுடு என்று கூறலாம்.

[2] ஆதித்தகரிகாலனும் பார்த்திவேந்திரபன்மரும் ஒருவரேயாதல் கூடும் என்பர் ஒருசாரார்; இதுகுறித்து "ஞானசம்பந்தம்" மலர் 16, இதழ் 10, பக்கம் 756-58ல் காண்க.

சுந்தரசோழனுல் கி. பி. 966ல் வெல்லப்பேற்ற வீரபாண்டியனே இவனுல் வெல்லப்பட்ட பாண்டியனுதல் கூடும். இவ்வாதித்த கரிகாலன் தன் தந்தையின் ஆட்சிக்காலத்திலேயே சில வஞ்சகர் களால் கோல்லப்பட்டான். இவ்வாதித்தகரிகாலனது ஆட்சி யாண்டுகள் குறிக்கப்பேற்ற கல்லெழுத்துக்களினின்று சிற்றிங்க ணுடையானின் சிறந்த தோண்டுகளைக் காண்பாம்.

திருவிடைமருதூர்க் கல்லெழுத்து [3]

திருவிடைமருதில் ஆழ்வார் ஸ்ரீகாரியம் ஆராய்கின்ற அதிகாரிகள் சிற்றிங்கணுடையான் கோயில்மயிலை பராந்தக மூவேந்தவேளாணும் திரைமூர்ச்சபையாரும், திருவிடைமருதில் நகரத்தாரும், தேவகன்மிகளும் நாடகசாலையில் கூட்டம் கூடினர். அவ்வூரில் சித்திமறைக்காடனை திருவேள்ளறைச் சாக்கை என்ற ஆடல்வல்லான் ஒருவன் இருந்தான். அவன் தைப்பூசத் திருநாளிலும், தீர்த்தமாடின பிற்றைநாள் தோடங்கி மூன்று நாட்களும், வைகாசித் திருவாதிரையின் பின் பிற்றை நாள் தோடங்கி மூன்று நாட்களும் ஆக ஏழு தடவை திருவிடை மருதில் உடையான் திருமுன் ஆரியக்கூத்து [4] ஆடுவதற்குப் பதினுற்கலம் நெல் கோடுப்பதற்காக ஒரு வேலி நிலத்தை அவர்கள் ஒதுக்கினுர்கள். இச்செயல் இரண்டாம் ஆதித்தனின் 4-ம் ஆட்சியாண்டில் நடைபேற்றது. இத்தகைய கூத்து நிலையாக நடத்த இவ்வதிகாரி முயற்சி எடுத்துக்கோண்டமை யான், நாகரிகக் கலைகளை வளர்ப்பதில் இவனுக்கிருந்த ஆர்வம் புலப்படுகின்றது.

படிமாற்றுயர்த்தல்

ஆதித்தகரிகாலனது 4வது ஆட்சியாண்டு 170வது நாள் குறிப்பிடப்பேற்ற கல்லெழுத்தொன்று [5] ஒரு அரிய செய்தியை

---

[3] 154 of 1895; S. I. I Vol V No. 718; Vol III 202.

[4] புராண இதிகாசக் கதைகளைத் தழுவிவரும் கூத்து ஆரியக் கூத்து எனப்பேறும் - மு. ரா. ஆராய்ச்சித் தோகுதி - பக்கம் 453 அடிக்குறிப்பு.

[5] 214 of 1907 ; S. I. I. III 203.

அறிவிக்கின்றது. திரைமூர், சாஸனத்துள் கண்டவண்ணம் ஒரு குடிநீக்கி தேவதானம்;[6] ஆண்டுதோறும் பஞ்சவாரமாக[7] 260 கலம் நெல் கோடுக்கவேண்டும். ஆனால் படிமாற்றில்[8] நூற்றறுபது கலம் நெல் வரவு வந்தது. திரைமூர் தேவதானம் இருபதிற்று வேலியும் குடிநீக்கிற்றில்லே என்று கூறி 800 கலம் நெல் கோடுக்கப்பேற்றுவந்தது. சிற்றிங்கணுடையான் திரை மூரைத் தேவதானமாக்கிய மூலவோலையை வருவித்தான்; குடி நீக்கி என்பதைக் கண்டறிந்தான்; இனி அடைஓலைப்படி திருவிடைமருதன் என்னும் மரக்காலால் 2800 கலமும், பஞ்ச வாரமாக 260 கலமும் கோடுத்துவரல்வேண்டும் என்று உத்தர விட்டான்; இதுகாறும் கோடுக்காத தோகையை முதற்பொரு ளாக்கி, அம்முதற் பொருளினின்று கிடைக்கும் வருமானத்தைக் கோண்டு படிமாற்றை அதிகரித்தான். இங்ஙனம் கோயில் கணக்குகளே நன்கு ஆய்ந்து, கோயில் வருமானத்தை மிகுவித்துப் படிமாற்றை அதிகரித்தமை, இச்சிற்றிங்கணுடையா னின் இறைபணிநிற்றலில் போறுப்புணர்ச்சியை நன்குணர்த்தும்.

அன்னம் பாலிப்பு

கும்பகோணத்திலுள்ள நாகேசுவரசுவாமி கோயில் குடந்தைக் கீழ்க்கோட்டம்[9] எனப்பேறும். அங்கு இரண்டாம் ஆதித்தனின் மூன்றும் ஆட்சியாண்டுக் கல்வேட்டொன்று[10] கிடைத்துள்ளது. திருக்குடந்தைச் சபையினர் சிற்றிங்க ணுடையானுக்கு நிலம் விற்றனர். அந்நிலவருவாய் கொண்டு,

---

[6] பழங்குடிகளைநீக்கிக் கோயிலுக்கு அளிக்கும் நிலம் அல்லது ஊர்; இதனல் கோயிலே மேல்வாரம் குடிவாரம் இரண்டும் அனுபவிக்கமுடியும் - (S. I. T. I. Vol III Part II P 1418)

[7] பஞ்சவாரம் - கிராமங்களில் பஞ்ச ஒழிப்பிற்கென்று ஆண்டு தோறும் சிறிது நெல் ஒவ்வோருவரிடமும் வசூலிக்கப்பெறும்; இது பஞ்சவாரம் எனப்பேறும்.

[8] படிமாற்று - Scale of expenses in the temple; செலவுத் திட்டம்.

[9] திருநாவுக்கரசர் பாடியுள்ள தாண்டகம் மட்டுமே கிடைத் துள்ளது.

[10] 230 of 1911.

வேதம் வல்ல அபூர்விகள்[11] இருபதின்மருக்கும், ஐந்து சிவ யோகிகளுக்கும்[12] திருக்கீழ்க்கோட்டத்துப் பெருமான் திருக் கோயிலில் அன்னம்பாலிக்கச் சிற்றிங்கணுடையான் ஏற்பாடு செய்தான். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்றதை நன்குணர்ந்து பணியாற்றும் இத்தலைவன் பின்னும் குடந்தைக் கீழ்க்கோட்டத்தில் 50 பிராமணர்களுக்கு அன்னம் பாலிக்க நிலமளித்தான் என்று இன்னொரு சிலாலேகை[13] செப்பு கின்றது.

பிராபாகரம்வக்காணித்தல்

திருக்குடமூக்கில் மூலப்பருடைப் பெருமக்கள்[14], சிற்றிங்க ணுடையானுக்கு இரண்டாம் ஆதித்தனின் மூன்றும் ஆட்சி யாண்டில் இரண்டு மா நிலம் விற்றனர். அந்நிலத்தைப் பிராபா கரம் வக்காணிப்பார்க்குப் பட்டவிருத்தி[15] யாகச் சிற்றிங்க ணுடையான் அளித்தனன் என்று ஒரு கல்லெழுத்து[16] நுவல் கின்றது.

(தொடரும்)

---

[11] அபூர்விகள் - பெரும்பாலும் தல யாத்திரை செய்யும் பிராமணர் (S. I. T. I. Vol III Part II P 1393).

[12] சிவபெருமானைத் தியானம் புரிந்து யோகநெறியைப் பயில் பவர்; சிவயோகம் ஆவது யாதென்பதனை "எப்பொருள் வந்துற் றிடினும்" என்ற உண்மைநெறி விளக்கச் செய்யுளால் அறிக. "சிவயோகி ஞானி சேறிந்த அத்தேசம் - அவயோகமின்றி அறிவோருண்டாகும்" என்ற திருமந்திரத்தால் சிவயோகிகளின் பெருமை விளங்கும்; பிரமோத்தரகாண்டம் சிவயோகியர் மகிமைச் சருக்கமும் காண்க.

[13] 231 of 1911.

[14] திருக்குடமூக்கு - கும்பகோணம்; மூலப்பருடைப் பெரு மக்கள் - சிவன்கோயில் நிர்வாகத்தை நடத்தும் குழுவினர்.

[15] பட்டவிருத்தி - கல்வி வல்ல பிராமணருக்கு விடப்பெற்ற இறையிலி நிலம்.

[16] 233 of 1911 S. I. I, III 200.

கடிதம் 16

புதுமைக்கு...

செஞ்சோற்கோண்டல்

வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் B. A.,

தமிழ்ப் பேராசிரியர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.

அன்புள்ள புதுமைக்கு

என் கடிதம் கிடைத்து மகிழ்ந்ததாகவும் பல அறிவுரைகளை உட்கோண்ட அதனை மனமாரப் பாராட்டிப் போற்றுவதாகவும், இனியும் அதுபோல் நல்லறிவுரைகளைத் தரும்படியும் கேட்டிருந்தாய். உன் அறிவு வளர்ச்சி என்னைப் பெரிதும் மகிழச்செய்கிறது. என் தம்பியின் சிறப்பு, பண்பு, மாட்சி எல்லாம் என் மாட்சியே யன்றே? 'என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பேற்றதன்றே?' இந்த மாதத்தில் பதினோராம் நாள் மகாகவி பாரதி நாள் வருவதாகக் கடைசியிற் குறிப்பிட்டுவிட்டுப் பாரதியைப் பற்றிய தங்கள் கருத்தை அறிய அவாவுகிறேன்' என்றும் ஒரு குறிப்பெழுதியிருந்தாய். ஆம்; தமிழகம் கண்ட தவப்புதல்வராகத் திகழ்ந்த அந்தப் பெருங் கவிஞரைப் பற்றிச் சிந்தித்து அவரை அந்நாளில் தொழுதல் இன்றியமையாததேயாகும்.

பாரதியின் பாட்டுக்கள் வெறும் பாட்டுக்களாக இல்லை; பாரதியின் உணர்ச்சியும் அநுபவமும் உடையவையாக இருந்தன. வெறும் சொற்களும், அவற்றுன் விளக்கம் பெற அமைக்கப்பேற்ற பொருளும், அணிவகைகளை வேண்டுமென்றே தினிக்கப்பேற்ற இடர்ப்பாடும், ஆகிய செயற்கைப் பண்புகள் இன்றி, அக்கவிஞர்பேற்ற அநுபவத்தொகுப்பாக அப்பாடல்கள் இயங்குகின்றன. ஒரு வகையிற் பார்த்தால் பாட்டு என்பது சொற்களால் விளக்கவியலாத அநுபவத்தைச் சொற்களால் ஆக்கும் மொழிபெயர்ப்பாகும் என்று கூறலாம். உன் கால இலக்கிய ஆராய்ச்சிப் பேருந்தகை ஆபர்கிராம்பி என்பார் 'Poetry is the translation of experience into language' என்று எழுதிய வரிகள் இப்போது உன் நினைவிற்கு வரும்.

பாரதியின் பாடல்களில் இவ்வுணர்ச்சி அநுபவத்தைத்தெளிவுறக் காணலாம். இதனாலேயே அக்கவிஞரின் பாடல்கள் இன்று கற்றோர் கல்லாதோர் இருசாராராலும் மதிக்கப்பெறுகின்றன. உணர்ச்சிக்கு வடிவம் கொடுக்க முற்பட்டதே அப்புலவரின் கவிதைப் பேரோவியத்திற்கு வழிகாட்டியாக அமைந்தது என்பேன் நான். பாரதக் கதையை முன்பு படித்தபோது இருந்த உணர்ச்சிக்கும் பாரதியின் பாஞ்சாலி சபதத்தைப் படிக்கும்போது இருக்கும் உணர்ச்சிக்கும் எவ்வளவு வேற்றுமை உள்ளது! எண்ணிப் பார்:

'நாயகர்தாம் தம்மைத் தோற்றபின் — என்னை
கல்லும்உரிமை அவர்க்கில்லை — புலைத்
தாயத்திலே விலைப்பட்ட பின் — என்ன
சாத்திரத்தால் என்னைத் தோற்றிட்டார்?' (256)

என்று பாஞ்சாலி கேட்கும் பகுதியினை எண்ணிப்பார். பாஞ்சாலி சபதம் செய்கிறாள்; துச்சாதனன் இரத்தமும் துரியோதனன் இரத்தமும் கலந்து கூந்தலிற் பூசியபின்பே முடிப்பேன் என்று கூறியவுடன்,

'ஓமென்றுரைத்தனர் தேவர் — ஓம்
ஓமென்று சொல்லி உறுமிற்றுவானம்!
பூமியதிர்ச்சி உண்டாச்சு! — விண்ணைப்
பூமிப்படுத்திய தாம்சுழற் காற்று' (308)

என்று பாடும்போது எவ்வளவு உணர்ச்சி! தன் சிற்றப்பனான விதுரனுக்குத் துரியோதனன் மறுமொழி கூறுகிறான்; நீ நன்றி கேட்டவன்; நாணமற்றவன்; தின்ற உப்புக்கு நாசம் தேடுபவன். உன்னையும் மன்றினில் வைத்தானே என் தந்தை என்று பழிக்குமிடத்தில், சுதந்திரப் போராட்டத்தின்போது அரசாள்வாரின் அடிபணிந்து, வெள்ளையர் கைக்கூலிகளாய் வாழ்ந்திருந்தோரை நினைந்தே பாரதி பாடியிருக்க வேண்டும். ஆம்; உணர்ச்சி பேருக்கெடுக்கிறது அங்கே:

'நன்றிகேட்ட விதுரா — சிறிதும் — நாணமற்றவிதுரா!
தின்ற உப்பினுக்கே — நாசம் — தேடுகின்றவிதுரா!
அன்று தோட்டுநீயும் — எங்கள் — அழிவுதோடுகின்றாய்!
மன்றிலுன்னை வைத்தான் — எந்தை — மதியையென்னுரைப்பேன்
(288)

'நமக்குத் தொழில் கவிதை ; நாட்டிற்குழைத்தல் ;
இமைப் போழுதும் சோராதிருத்தல் — உமைக்கினிய
மைந்தன் கணநாதன் நங்குடியை வாழ்விப்பான்
சிந்தையே இம்மூன்றும் செய்'

என்கிறார் தாம் பாடிய விநாயகர் நான்மணிமாலையில். (25) ஒன்றே குலமும் ஒருவனே தேவன் என்பதை உள்ளத்துக் கொண்டவர் அவர் ; பாடுகிறார், கேள் :

'சுத்தஅறிவே சிவமென்று கூறும்
சுருதிகள் கேளீரோ — பல
பித்தமதங்களி லேதடுமாறிப்
பெருமை அழிவீரோ? (அறிவே தெய்வம் 3)

இதைவிட வேறு அறிவுரை வேண்டுமா, என்ன! மாயையைப் பழித்தல் என்ற தலைப்பில் அவர் பழிப்பது உலக மாயையை யேனும் அவருடைய அடி நெஞ்சம் அதன் வாயிலாக ஆங்கில மாயையையே பழிக்கிறது எனலாம் :

'எத்தனை கோடி படைகொண்டுவந்தாலும் மாயையே — நீ
சித்தத் தெளிவெனும் தீயின்முன் நிற்பாயோ மாயையே?'

'யார்க்கும் குடியல்லேன் யானென்பதோர்ந்தனன் மாயையே!
— உன்றன்
போர்க்களுசு வேனை போடியாக்குவேன் உன்னை
மாயையே! (218)

இவற்றையெல்லாம் பயிலும்போது அப்புலவர் பிரானுக்கிருந்த உணர்ச்சி வெள்ளத்தில் நாம் ஓரளவு மூழ்கவே முடிகிறது. நமக்கும் ஒரு வீர உணர்ச்சி ; ஓர் ஆற்றல்! 'தந்தையர் நாடென்ற போதினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே' எனும்போது நமக்கு உண்டாகும் பெருமிதத்தைக் காண்பாயாக. கோட்டி முழக்கிப் பெய்யும் பெருமழையைப் பார்த்துப் பெருங் களிகொண்டு பாடுகிறார் :

'திக்குகள் எட்டும் சிதறி — தக்கத்
தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட
பக்கமலைகள் உடைந்து — வெள்ளம்
பாயுது பாயுது பாயுது தாம்தரிகிட'

எவ்வளவு வேகம்! மழையின் போழிவில் ஒன்றுபட்டு, அதன் தாள அமைப்பில் தம் கவிதையைக் கோத்துள்ள இதன் உண்மை உணர்ச்சி மாட்சியை மறக்கமுடியுமா?

'நாட்டுமாந்தரேல்லாம் - தம்போல் நரர்களென்று கருதார்
ஆட்டுமந்தையாமென் - றுலகை அரசர் எண்ணிவிட்டார்' (220)

என்று பாடும்போது, மக்கள் அரசின் மதிப்பீடு உள்ளுறைப் பொருளாக உள்ளதல்லவா? புதுமை! பாரதியின் நெஞ்சக் கருப்போருள் அவரையறியாது பாடலிற் கலந்து வருவதைப் பார்த்தாயா? இதைப் பார்க்கும்போதுதான் கவிதை பாவலனே அடிமை கோள்கிறது; பாவலனுக்குக் கவிதை அடிமையன்று என்ற மோழி மேய்ம்மையே என்பது தேளிவாகும்.

பாரதிக்குப் பின் பலர் பாடத்தோடங்கிவிட்டார்கள். பேரும் பாலோர் பாடல்களே அறிவுடையோர் எண்ணுதலும் இழுக்காக உள்ளது. கருத்தில்லாமல், தேளிவில்லாமல், உணர்ச்சி இல்லாமல் ஏதோ மனம்போன போக்கில் உளறிக்கோட்டுதலும், அதைச் சிலரும் பலரும் கூடி வானளாவப் புகழ்ந்து 'என்னே நயம்! என்னே கவிதை மாட்சி' என்று பாராட்டுதலும் இன்று பெருவழக்கமாகிவிட்டன என்பதைக் குறித்து நான் வருந்தாமல் என்ன செய்வது தம்பி!

பாரதியின் குழந்தைக் கவிகள், நாட்டுப் பாடல்கள், கண்ணன் பாடல்கள், தோத்திரப் பாடல்கள், குயிற்பாடல் அனைத்தும் உணர்ச்சி வேள்ளங்கள். உணர்ச்சிக்கு உருவம் கோடுக்கும் பழங்காலப் புலவர்களில் பாரதி ஒருவராய்த் திகழ்ந்தார். பண்டிதர்கள் பலர் அப்பாடல்களே நேருங்காமல் சேய்மையில் நின்று கண்டபடியே அவற்றைத் தீது என்ற கோள்கை உடையவராதலே விட்டோழிக்க வேண்டும்.

'தேள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்'

என்று பாரதியே பாடுகிறார். தம்முடைய பாட்டு இவ்வுலகை வாழ்விக்கவேண்டும் என்பது அவர் கருத்து. 'பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேணும்' என்பது அவர் வாக்கு.

தமிழர் சமூகத்தை உயர்த்த அவர் பாடிய பாடல்கள் அனைத்தும் பயன்படும். அவற்றை மெய்யாகப் பயின்று நம் மக்கள் நன்கு வாழப் பழகவேண்டும். தமிழர்களின் அவல நிலையைக் கண்டு நெஞ்சுருகி,

" விதியே! விதியே! தமிழச்சாதியை
என்செய நினைத்தாய்? எனக்குரையாயோ "

என்று வேதும்புகிறார்.

" பொய்மைச் சாத்திரம் புகுத்திடின் மக்கள்
பொய்மையாகிப் புழுவென மடிவர் "

என்று இரங்குகிறார். இயற்கையைக் கண்டு அங்கும் தம் உணர்ச்சியையே காண்கின்றார் பாரதி; சேவல் கூவுகிறது; அது 'சக்தி வேல்', என்று கூவுவதாகக் காண்கின்றார்;

'பின்னர் தேருவிலோர் சேவல் — அதன்
பேச்சினிலே 'சக்திவேல்' என்று கூவும்!"

ஒன்றே கடவுள் என்ற உணர்ச்சியை அவர் வடித்திருக்கும் பின் வரும் அருங்கவியிற் காணலாம்:

" ஆத்திசூடி இளம்பிறை யணிந்து
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்;
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்;
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை; எனப்பல மதத்தினர்
உருவகத்தாலே உணர்ந் துணராது
பலவகையாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே: அதனியல் ஒளியுறும் அறிவாம்;
அதனிலே கண்டார் அல்லலே யகற்றினர்;
அதனருள் வாழ்த்தி அமரவாழ் வெய்துவோம் "

இவ்வாறு பலவகையானும் கவிதைகளைப் பாடி, இந்நூற் றாண்டின் இலக்கியக்கலை (பாட்டுக்கலை)யில் தலைமைசான்ற புலவராக வீற்றிருந்தவர் பாரதி. புதுமை! அவர் வாழ்ந்த காலத்தில் நாடு அவரை — அப்பெருங்கவிஞர் பாடல்களை — நன்கு உணரவில்லை; போற்றவில்லை. இன்று மணிமண்ட பங்கள் என்ன, மன்றங்கள் என்ன, நினைவு நிதிகள் என்ன

வளர்ந்துகோண்டே போகின்றன. எல்லோரும் அக்கவிதை களைத் திரும்பி நோக்க முற்பட்டிருக்கிறார்கள். நம் இந்திய அரசியலார் அவரது நினைவுநாளில் அக் கவிஞர்பிரானின் திரு வுருவத்தை அஞ்சற்றலைகளில் (Stamps) போறித்துத் தமிழகத் துக்கு வழங்கியுள்ள தனிச்சிறப்பை நெஞ்சாரப் பாராட்டுகிறேன் தம்பி!

உண்மை என்ற உள்ளீடு இல்லாததனால் 'வேறுங் கற்பனைகள்' (Fancy) என்று அறிஞர் வெறுக்கும் வெறுப்புக் காளாகும் பிற பாடல்களைப்போல் ஆகாமல் இயல்போடு அவை விளங்குகின்றன. அவை தமிழகத்தை வாழ்விக்கும் பாடல்கள்; ஓங்குவிக்கும் பாடல்கள்; உயர்த்தும் பாடல்கள்.

புதுமை! பாரதி உனது போக்கிலே வளர்ச்சி, மாற்றம், காணத்துடித்தவர்; நீ அடைந்த நல்லமாற்றத்தைக் காண்பதற்கு முன்னே இவ்வுலகை விட்டுப் பிரிந்தவர்; அவர் புகழ் வாழ்க.

உன் கடிதத்தை விரைந்து நோக்குகிறேன்.

உனது

பழமை

குமரகுருபரன் ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர்பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலிய வற்றை எளிய நடையில் தெளியச்சேய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் :- நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்,

"குமரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீ வைகுண்டம்,

உடல் வளர்க்கும் மூலிகைகள்

திரு. V. பலராமையா B. A., B. L., அவர்கள்,
District Magistrate, Cuddalore.

(மலர் 19, இதழ் 9, பக்கம் 519 இன் தொடர்ச்சி)

முசுமுசுக்கை 11

இது ஓர் கோடி, வேலிகளில் படர்ந்திருக்கும், இலை சுரசுரப்பாயிருக்கும். இதில் தாமிரசத்துள்ளது. மூலிகைகளில் தாமிரசத்துள்ளவைகள் மற்ற சத்துள்ள மூலிகைகளைக் காட்டிலும் உயர்ந்த பலனைத்தருமென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும். இது குழந்தைகளுக்கு ஓர் நல்ல மூலிகை.

உபயோகமுறை:- இதன் இலையை இடித்து சார்பிழிந்து, அதைக் கரண்டியில் கோதிக்கவைத்து வடித்து ஒரு சங்களவு சுரசத்தில் வேண்டிய அளவு தேன்கூட்டி 4 மணிக்கு ஒருதரம் இரண்டு அவுன்சுகள் ஊட்ட கபத்தால் சுவாசம் அடைபட்டு அவஸ்தையுறும் குழந்தைகள் உடனே குணமடைவர், காய்ச்சல் குறையும். இந்த சுரசத்துடன் துளசி சார் அல்லது நாய்த் துளசிச்சாரை சேர்த்துக்கொடுக்க வேதுவிரைவில் குணத்தைத் தரும்.

சர்பத்து:- முசுமுசுக்கை பிழிந்த சார் $\frac{1}{8}$ படி, பேரியமணல் $\frac{1}{4}$ படி. மணலைச் சட்டியிலிட்டு பரக்கபரக்க வறுத்து அதில் ஜாக்கிரதையாக மெதுவாக சாற்றை மணலில் சாய்த்து ஈரம் போக மறுபடியும் வறுத்து சூடாக்கி சூடுவந்தவுடன் அந்த மணலில் $\frac{1}{2}$ படி நல்ல ஜலம் விட்டு மணலுடன் கோதிக்கவிட்டு $\frac{1}{8}$ படியாக வற்றவிட்டு வடிகட்டி 4 அவுன்ஸ் தேன் கூட்டி வைத்துக்கொள்ளவும்.

காலை மாலை $\frac{1}{16}$ படி பசும்பாலில் $\frac{1}{2}$ அவுன்ஸ் சர்பத்விட்டு சாப்பிட நல்ல பசியைத் தூண்டும். அன்ன துவேஷத்தை நீக்கும். தலை சிறுகிறுப்பு நீங்கும். சரீரத்தில் தேம்பு உண்டாகும். கப வியாதியுடையவர்களுக்கு மிக்க பலனைத்தரும். சுவாச வியாதியுடையவர்கள் ஒருவருடங்கொள்ள அவ்வியாதி நீங்கும்.

இந்த சர்பத்தையே ஒரு பேரிய வைத்தியர் எல்லாவியாதி களுக்கும் கோடுத்து பலனேப்பேற்றது நான்கண்ட அனுபவம். நானும் சிலருக்குக் கோடுத்து மிக்க பயனேயளித்தது.

குப்பைமேனி 12

தெலு:- குப்பன்டாகு. மலே:- குப்பமணி. சமஸ்:- அரிட்ட மஞ்சரி.

இது செடிகளாக இருக்கும். முழ உயரத்தில் குத்து குத்தாக எல்லா இடங்களிலும் உண்டாகும். இதையறியாத வர்கள் சிலரே இருப்பர். காட்டுச்செடிபோல் காந்தல் காலங் களிலும் கிடைக்கும். மூலிகைகளில் பூத்த செடிகளே எடுத்து மருந்துக்கு உபயோகிப்பதே முறை என்பதை ஞாபகத்தில் வைத்துக்கோள்ள வேண்டும்.

குறிப்பு:- இம்மூலிகையில் தங்க சத்துள்ளது.

உபயோக முறை:- (அ) மேனி சமூலம் (சமூலம் - வேரு டன் செடி பூராவும்) நறுக்கி நிழலில் உலர்த்தி ஒரு பாத்திரத்தில் போட்டு ஜலம் இலேமுழுகும் அளவுவிட்டு ஒருநாள் ஊறிய பின்பு மறுநாள் காலேயில் நீரை வடித்து எடுத்து நிழலில் உலர்த்தி மறுபடியும்முன்போலவேபாத்திரத்திலிட்டு தண்ணீரில் மிதக்கவிட்டு இராத்திரி மாத்திரம் ஊறவைத்து காலேயில் தண்ணீரை இறுத்துப் பின்னும் உலர்த்தி இதுபோல் 10 முறை சுத்தி செய்து நன்றாக நிழலிலேயே காயவைத்து இடித்து வஸ்திரகாயம் செய்து சூரணம் ஒருபங்கு சீனி சர்க்கரை ½ பங்கு சேர்த்துக் கலந்து காலேயும் மாலேயும் வேளைக்கு வராகனேடை சாப்பிடவும். இது கற்பம்.

முலம், மண்டை குடைச்சல், தேமல், சூஷ்டம், இளகரை தீரும். தயிர், பால் அதிகம் சேர்க்கவும்.

(b) குப்பைமேனி இலேயை இடித்துச் சாறுவாங்கி அதில் சுண்ணும்பு கலந்து பூரான் கடி வீக்கம், மற்ற விஷக்கடி வாயில் பூசிவிட வீக்கம் குறையும். சாதாரணமாக எல்லா வீக்கங்களுக்கும் போட குணமாகும்.

தேள் விஷத்திற்கும் சுரசத்தைக் காதிலும் மூக்கிலும் பிழிய குணத்தைத் தரும். லிங்கத்தைச் சுத்திசெய்து மேனி இலையை அரைத்துக் கனமாக கவசித்து 20 வரட்டியில் புடமிட நேர்த்தியான சேந்தூரமாகும். லிங்கசுத்தி=சாம்பிராணி கற்பூரம் சமஎடை ஒருகல்வத்தில் அல்லது உரலிலிட்டு இருப்புலக்கையால் இடிக்க மெழுகாகும். அம்மெழுகை 10 துண்டு சீலைகளில் பிளாஸ்திரிபோல் தடவி லிங்கத்திற்குக் கவசம்செய்து எரிக்க நெருப்புப் பிடித்து எரியும். ஆறியபின் லிங்கத்திற்கு மேலிருக்கும் அழுக்கை அகற்றி மறுபடியும் மெழுகுத் துணியைச் சுற்றி எரிக்கவும். இவ்விதம் 10 முறை செய்ய நேர்த்தியான சுத்தியாவதோடு லிங்கமும் கொஞ்சம் இறுகும்.

13. நீலி (Indigo)

தெலு:- நீலி, மலை:- நீலம், சம்ஸ்:- நீலினி.

நீலி, கருநீலி என இரண்டு வகைப்படும். இதை அவுரி எனவும் கூறுவர். இது புஞ்சை நிலங்களிலும் ஏறிக்கரைகளிலும் கிடைக்கும். இதில் குத்து குத்தாகக் காய்கள் காய்க்கும். இதை நஞ்சை புஞ்சை நிலங்களில் உரத்திற்காகப் பயிர்செய்கின்றனர்.

உபயோக முறை :- இம்மூலியின் வேர்பட்டையே விசேஷ பலனைத் தரத்தக்கது. இலையும் உபயோகமுண்டு. பாஷாணங்களால் ஏற்படும் எல்லாவித நோய்களுக்கும் கொடுக்க முறிவு உண்டாகி ஆரோக்கியத்தைத்தரும். பச்சை வேரைக் கொஞ்சம் வறுத்த மிளகுகூட்டி அரைத்து சுண்டைக்காயளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைத்து விஷக்கடிகள் எல்லாவற்றிற்கும் வெண்ணீரில் உறைத்துக் கொடுக்க அதிக பலனைத் தரும். நிழலில் உலர்த்திய வேரைக் கஷாயமிட்டு விஷக்கடிகளுக்குக் கொடுக்கலாம். இந்தமூலிகை, கடைகளில்கிடைக்காது. குஷ்டமும் இதில் குணமாகும். கிரந்தி, சொறி சிரங்குகளுக்கு இதன் இலையை நல்லெண்ணெயில் காய்ச்சி மேல் பூச்சாகத் தடவ மிக்க குணம்தரும். இம்மூலிகையின் இலையைக் கொண்டுவந்து நிழலிலுலர்த்தி சூரணம் செய்து கற்கண்டு சூரணம் சம எடை சேர்த்து வெருகடி இருவேளை மூன்று மாதங்கள் சாப்பிட தேகம் வச்சிரகாயமாகும். ஒரு வருடம் கொண்டால் சகலசித்தியுமுண்டாகும். 300 வருடங்களிருப்பான்.

14. பொடுதலை

தெலு :- போக்கினி, மலை :- காட்டுதிப்பிலி, சம்ஸ் :- வஷிரா.

இம்மூலிகை நீரிரிருக்கும் இடங்களில் தரையோடு படர்ந்து இருக்கும். இதன் காய் திப்பிலி போன்று இருக்கும். எங்கும் கிடைக்கும். கடையில் கிடைக்காது. பச்சை மூலிகைகள் விற்கும் கடைகளில் கிடைக்கும். குழந்தைகள் கிராணிக்கு ஓர் சிறந்த மூலி. இம் மூலிகையிலிருந்து உப்பு எடுத்து சாப்பிட சடம் வலுக்கும். உடல் காந்தியைத் தரும்.

" பேதியோடு சூலைநோய் யேசரிய வேண்மேகம்மே
வாதமும் போமெய்யுரக்கும் வாழ்த்து "

இது ஓர் சேந்தூராதி. இந்த மூலிகையின் ரசத்தில் அயம், எஃகு முதலியவைகளை அரைத்துச் சேந்தூரம் செய்தல் நலம்.

உபயோகமுறை :- உப்பேடுக்கும் முறை வல்லாரை (நே. 3) பார்க்கவும் இந்த உப்பை மிளகளவு நீரிற்கலந்து சாப்பிட சகல வியாதியும் தீரும். கிராணிக்கும் குழந்தை களுக்கும் பலரகப்பட்ட கழிசலுக்கு இம்மூலிகையை சமூலம் ½ பலம் அலம்பி வைத்துத்கொண்டு கடாபில் மிளகு எண்ணிக் கை 15, போன் வருவலாக வறுத்துப் போடிசெய்து அதில், அலம்பிவைத்த மூலிகையைப் போட்டு நன்ருக வதக்கி ⅛ படி ஜலம்விட்டு $\frac{1}{16}$ படியாக வற்றவைத்து ஒரு நாளைக்கு மூன்று வேளை ஒரு அவுன்ஸ் வீதம் கொடுக்க இரண்டு நாட்களில் கட்டாயம் குணமாகும்.

மற்றும் இம்மூலிகையை சமூலம் நிழலிலுலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து வேருகடி தேனிற் காலை மாலை கொள்ள திரிதோஷசமனமாகும்.

குறிப்பு :- இம்மூலிகையில் தாம்பிரசத்துள்ளது. அன்ன பேதி சேந்தூரம் இம்மூலிகை சுரத்தில் செய்து சுரம், கீல்வாதம், குன்மம், குழந்தைகள் ஈரல் குலைக்கட்டி முதலிய பல வியாதி களுக்குக் கொடுக்கலாம். (தொடரும்)

சவுந்தரியந்தாதி

பவளக்கொடி அடிகள்

(மலர் 19, இதழ் 8, பக்கம் 562 இன் தோடர்ச்சி)

ஆதார மாறுமும் மண்டலங்க
ளவையே கடந்த சபையே
நாதாவு நீயுமோன் ருகிநின்ற
ஞான சுகங்க னதனு
லோதத்தி ருந்துமுள மேகசிந்து
முருகா வரங்க ளுதவாய்
மாதாமு குந்தனினே யாயனந்த
மாயா மதங்கி வடிவே. 45

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

வடிவமுறு சடைமௌலி யடியருள நடனமிடு
வரதனிட முடைய மணியே
கடிகமழு மடியிணைகள் கலகலென ஞெகிழியணி
கனகவரை யரையன் மயிலே
துடியிடையு மிளமுலையு மணிவடமு மிருவிழிகள்
சுரிகுழையை யிகலு மழகு
குடிமருவு மெனதுமன நோடியளவி லெனதரிய
குறைதவிரு மருள்பு ரியுமே. 46

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

புரியுந் தொழிலு முலத்திற்
போங்குஞ் சலதிப் பேருங்கடலைக்
கரிகோண் டரிய கனலெழுப்புங்
காற்றும் புகுந்து களங்கமல
மேரியுஞ் சுழுமுனைத் தடமேறி
யிசன் றிருத்தா ளிணையடைந்து
தூரியங் கடந்த பெருவெளிக்கே
துஞ்சத் தருவாய் துரைமாதே. 47

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

மாது நின்கருணை ஞான நித்திரைசெய்
மஞ்ச நாலுநிலை கால்களும்
வேதன் மாலுடனு ருத்திரன் கனம
கேசு ரன்றலைவி தித்தபே
ரோது பின்னலுறு மஞ்ச மானதொரு
வுச்சி தத்துறை ச தாசிவன்
மீது கண்டுயில வல்லை யுன்கிருபை
யன்றி வேறெருவி ருப்பமே. 48

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

விருப்பங் கோடுமோக மேழுப்பியபேர்
விழிக்குங் தொருநாளு மிரங்கிடுவா
ருருக்குங் தனிநாய கன்மேவியபோ
துழக்குங் கணைமாரி யுலந்திடுமே
பெருக்குங் களிநெஞ்ச நிறைந்ததுபோற்
புறப்புங் கோடியேனை யொழிந்திடவே
பெருக்குஞ் சடைமாம தியம்பரம
னெழுப்புந் துயிறெவி யெழுந்தருளே. 49

அருளா ரமுதப் பெருங்கடலை
யடைக்குஞ் சிமிழோ வடியார்கள்
போருளார் தமிழைப் புகட்டவந்த
போற்செப் பிருக்கும் புத்தமுதோ
விருமா மலைகண் கறுப்பெனது
பேசுப் பிறப்புந் தோலைமருந்தோ
திருமா மகளுங் கலைமகளுந்
திருத்தும் பணதி தரித்தாளே. 50

தாளுஞ் சிலம்பு மணிக்கலையுங்
தயங்கும் பவளக் கோடியிடையுங்
தோளுங் கமுகங் கழுத்துமுலைத்
துணையுஞ் சுடர்மா மணிவடமுங்
காளங் கரும்பா யமைத்தபசுங்
கையுஞ் செய்ய கனிவாயு
மீளுங் குழையைப் போருதவிழி
வேலுங் கடையேன் விழித்துணையே. 51

செய்திகள்

தருமையாதீனத்தில் ஆவணிமூலத் திருநாள்

முப்பொருள் மாநாடும்
ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டுவிழாவும்

தருமையாதீன மடாலயத்தில் இவ்வாண்டு ஆவணிமூலத் திருநாளும், ஆதீனம் கல்வி நிலையங்களின் ஆண்டுவிழாவும், முப்போருள் மாநாடும் 29—8—60 முதல் 31—8—60 முடிய நடைபெற்றன. பதி, பசு, பாசப் போருள்களைப்பற்றி மூன்று நாட்களும் விரிவுரைகள் நிகழ்ந்தன.

29—8—60 முதல்நாள் "பசு". ஆதீனத்தேவாரபாடசாலை, தொடக்கப்பள்ளிகளின் ஆண்டுவிழா. ஆதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர் முதுபேரும்புலவர் திரு. முத்து. சு. மாணிக்க வாசக முதலியாரவர்கள் 'உயிரவைநிலை' பற்றிப் பேசினர்கள். சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம் கட்டளைவிசாரணை வித்துவான், ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் "தோத்திரநெறி" பற்றிப் பேசினர்கள். ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், வித்துவான், திரு. சோ. சிங்கார வேலன் B. A., நன்றி கூறினர். பிறகு ஆதீனத் தொடக்கப் பள்ளி மாணவ மாணவியர்களின் கலைநிகழ்ச்சிகள் நிகழ்வுற்றன.

30—8—60 இரண்டாம்நாள் "பாசம்". ஆதீன சிவாகம பாடசாலை உயர்பள்ளிகளின் ஆண்டுவிழா. மாயூரம் மன்னன் பந்தல் அன்பநாதபுரம் வகையார் அறத்துறைக் கல்லூரி முதல்வர், பேராசிரியர், திரு. M. விசுவநாதன் M. A., அவர்கள் "குடியாட்சி" பற்றிப் பேசினர்கள். சென்னை சமயப் பிரசார நிலையம் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரை மொழிந்தார்கள். பிறகு உயர்பள்ளி மாணவ மாணவியர்களின் கலைநிகழ்ச்சிகள் நிகழ்வுற்றன.

31-8-60 மூன்றும்நாள் "பதி"; ஆதீனப் பல்கலைக் கல்லூரி ஆண்டுவிழா. காலை 9 மணி தொடங்கி ஸ்ரீ சோக்கலிங்கப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் நடந்தன. நண்பகலில்

மாகேசுவர பூஜை நிகழ்ந்தது. மாலை 6-30க்குமேல் திருநேறிய தேய்வத் தமிழ் மன்றத்தில் விழாத் தோடங்கியது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஆசியருளி, தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி முதல்வர், திரு. அ. சீனிவாசராகவன் M. A., அவர்களுக்குச் சேந்தமிழ்ச் செம்மல் என்னும் பட்டம் வழங்கி யருளிப் பொன்னுடை போர்த்துச் சிறப்பித்தருளினர்கள். சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையம் வித்துவான், ஒடுக்கம், ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரைமொழிந்தார்கள். "சேந்தமிழ்ச் செம்மல்" திரு. அ. சீனிவாசராகவன் அவர்கள், "திருவாசகம்" பற்றிப் பேருரை யாற்றினர்கள். அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர், பல்கலைச் செல்வர், திரு. தெ. போ. மீனுட்சிசுந்தரம் பிள்ளை M. A., M. O. L., அவர்கள், சேந்தமிழ்ச் செம்மலைப் பாராட்டிப் பேசினர்கள். ஆதீன ஓதுவா மூர்த்திகள் கடவுள் வாழ்த்துப்பாட விழா நிறைவுற்றது.

இரவு 10 மணிக்குமேல் ஆதீனக் கல்விநிலைய ஆசிரியை களும் மாணவிகளும் "குற்றாலக் குறவஞ்சி" என்ற இலக்கிய நாடகத்தை அழகுற நடித்துக் காட்டினர். பல்கலைச் செல்வர் திரு. தெ. போ. மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் நாடகத்தில் நடித்தவர்களைப் பாராட்டி ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளிய பரிசுகளை வழங்கினர்கள். வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் அனைவர்க்கும் நன்றி தெரிவித்துக்கொள்ள நாடகம் இனிது நிறைவுற்றது.

சீகாழியில்

திருஞானசம்பந்தர் அபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்த மான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் சார்வரி யாண்டு ஆவணித்திங்கள் 21ஆம் நாள் (5—9—60) திங்கட்கிழமையன்று காலையில் ஸ்ரீ திருஞானசம்பந்தப் பெரு மானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. அன்று மாலை 5 மணிமுதல் திருமுறைப்பாராயணமும் இரவு சுவாமி புறப்பாடும் நடைபெற்றன. அன்பர்கள் பலர் வந்து தரிசித்து இன்புற்றனர்.

தருமை ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகத்தாரின் வார வழிபாடு

தருமை ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகத்தின் (மாயூரம்) வார வழிபாடு இம்மாதத்திலும் ஞாயிற்றுக் கிழமைகளில் சிறப்புற நிகழ்ந்தது. செம்போன்ஞர்கோயில் (திருச்செம்போன்பள்ளி) ஸ்ரீ சோர்ணபுரீசுவராசுவாமி திருக் கோயிலில் (14—8—60) அன்றும் வழுவூர் ஸ்ரீ வீரட்டேசுவர சுவாமி திருக்கோயிலில் 21—8—60 அன்றும் நிகழ்ந்தது. தருமையாதீனத்துக்குச் சோந்தமான திருக்கோயில்களில் கோறுக்கை ஸ்ரீ வீரட்டேசுவராசுவாமி திருக்கோயிலில் 28-8-60 அன்றும், தலைஞாயிறு ஸ்ரீ குற்றம் போறுத்தீசுவர சுவாமி திருக் கோயிலில் 4-9-60 அன்றும் வார வழிபாடு சிறப்புற நிகழ்ந்தது.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்

திருஇடைச்சுரத்தில் சமயப் பிரசார வார வழிபாட்டுக் கூட்டம்.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின் மாதாந்தர சமயப் பிரசார வழிபாட்டுக் கூட்டம் 7—8—60 ஞாயிறன்று மாலை 5 மணிக்குத் திரு இடைச்சுரத்தில சிறப்பாக நடைபெற்றது. சமயப் பிரசார வழிபாட்டுக் குழுவினரை ஊர்ப்பொது மக்களும், திருக்கோயில் அறங்காவலர்களும், மாலை சூட்டிப் பூரணகும்ப மரியாதை யுடன் வரவேற்றனர். சென்னையிலிருந்தும், சுற்றுப்புற ஊர்களி லிருந்தும் வந்திருந்த திரளான மக்கள் வழிபாட்டில் கலந்து சிறப்பித்தனர். குழுவினர் கோயிலை வலமாக வந்து ஸ்ரீஇடைச்சுரநாதரையும், ஸ்ரீ இமயமடக்கோடி அம்மையையும் பரிவார மூர்த்திகளையும் தரிசித்தனர். சுவாமிசந்நிதியில் அவ்வூர்த் தேவாரப் பதிகத்தினை நிலையத் திருமுறை ஆசிரியர் திரு. பி. சுவாமிநாதன், மாணவர் வே. இலக்குமணன் இரு வரும் இசையோடு ஒதி எல்லோரையும் இறைவழிபாட்டில் ஈடுபடுத்தினர். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் திருக் கோயில் இயற்கையான மலைச்சூழல்களுக்கிடையில் அமைந் திருப்பது அமைதி அளிக்கிறது. இறைவழிபாட்டிற்கு

இத்தகைய சூழ்நிலைதான் மிகவும் தேவை, நகர நாகரீகங்களில் வாழ்வோர் மாதம் ஒருமுறையேனும் இப்படிப்பட்ட சூழ்நிலையுள்ள தலங்கட்கு யாத்திரையாக வருவதால் மன அமைதியும் மகிழ்வும் பேறுகின்றனர். இறைவனுக்கு மலர் மாலை கட்டிச் சார்த்துவதால் தேவலோக நலங்களும், விளக்கிடுவதால் அறிவுவிளக்கமும் பெறலாம். கிராமங்கள் நிறைந்துள்ள இந்திய தேசத்தில் கிராமங்கள் வளமாக இருக்க அரசாங்கம் வழிகாணவேண்டும். கிராம மக்கள் நகரத்தில் குடியேறுதல் நாட்டிற்கே இழைக்கும் தீங்கு. சென்னையில் குடியேறியுள்ள இத்தலவாசிகள் மீண்டும் இங்கேயே வசித்து கிராமத்தை வளப்படுத்தவேண்டும் என்று அவ்வூர்ப் பொதுமக்கட்கு அறிவுரை கூறினர்கள். கயப்பாக்கம் திரு. சோமசுந்தரஞ் செட்டியார் அவ்வூர்த் தேவாரச் சிறப்புப் பற்றிப் பேசினர்கள். திரு. ச. சிவகுமாரன் அனைவர்க்கும் நன்றிகூறி, அடுத்த மாதம் 4—9—60 முதல் ஞாயிறன்று காலை மாலை இருவேளைகளிலும், காஞ்சிபுரத்தில் உள்ள பாடல்பெற்ற ஐந்து தலங்களிலும் வழிபாடு நடைபெறும் என்று அறிவித்தார்.

பிறகு வழிபாட்டுக் குழுவினர் இத்தலத்திலிருந்து 12வது மைலில் உள்ள திருப்போரூர் சென்று முருகப் பெருமானை வழிபட்டனர். முருகன் சந்நிதியில் திரு. பி. சுவாமிநாதன் அவர்கள் முருகன் பிள்ளைத் தமிழ், திருப்போரூர் சந்நிதிமுறை முதலிய பாடல்களைப் பக்திபரவசத்தோடு ஓதினர். முருகன் சேந்தமிழ்க் கழக மண்டபத்தில் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் சமயப் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. காஞ்சிபுரம் பஞ்சையப்பர் உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. க. வச்சிரவேல் முதலியாரவர்கள் 'மலர் போன்றவர் சிவபெருமான். அம்மலரின் மணம் போன்றவர் முருகப்பெருமான், மலர் தனது மணத்தால் நம்மைத்தன் வயப்படுத்துகிறது; அதுபோல இறைவன் முருகப்பெருமானைக் கொண்டு நம்மை எல்லாம் ஆட்கொள்கிறான்' என்றும் கூறினர்கள். குடந்தை திரு. எஸ். டி. பாலு வழிபாட்டின் அவசியம்பற்றிப் பேசினர். சுவாமிகள் தமது தலைமையுரையில் கோயில்களில் வழிபடும்போது ஒவ்வொரு சந்நிதியிலும் விழுந்து வணங்குவது கூடாது. கொடி மரத்தின் பின்னர்தான் அம்மாதிரி வணங்குவது முறை கோயிலில் பிறரை வணங்குவதும் முறை

யல்ல. வழிபடும்போது மூர்த்திகளின் உருவங்களே ஊன்றிக் கவனித்துத் தத்துவஉணர்வோடு வழிபடவேண்டும். ஸ்ரீ சிதம்பர சுவாமிகட்கு முருகப்பெருமான் உணர்த்தியபடியே இக்கோயில் திருப்பணி நடைபெற்றிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். திருக்கோயில் நிர்வாகம் புரிந்துவரும் ஸ்ரீ சிதம்பரசுவாமிகள் மடத்தைச் சேர்ந்த ஸ்ரீ சுவாமிகளும் வரவேற்புரை கூறினர்கள். சுவாமிகளும், கோயில் நிர்வாகிகளும் உடனிருந்து சுவாமி தரிசனம் செய்துவைத்தனர். மேயர் கம்பேனி ஆர். மாசிலாமணி முதலியார் குழுவினருக்குச் சிற்றுண்டி அளித்து உபசரித்தார்.

மறைஞானசம்பந்தர் குருபூஜை விழா

சென்னைத் தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தில் 24—8—60 மாலை மறைஞானசம்பந்தர் குருபூஜை விழா சிறப்பாகக் கொண்டாடப்பேற்றது. விழாவிற்குத் திரு. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் தலைமை வகித்தார்கள். புலவர் திரு. என். ஆர். முருகவேள் அவர்கள் "மறைஞானசம்பந்தர் மாண்பு" என்னும் பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்தினர்கள். தலைவர் தமது தலைமையுரையில் அறம், பொருள் இன்பம், வீடு என்ற சதுர்வித புருஷார்த்தங்களில் இன்றைய மக்கள் அறத்தையும், வீட்டை (மோட்சம்) யும் விரும்பாமல் இடையில் உள்ள பொருளையும், இன்பத்தையும் மட்டுமே விரும்புகிறார்கள். அப்படி விரும்புவது பேருந்துன்பத்தையே விளைவிக்கும். நமது நாட்டு ஞானியர்கள் மோனநிலையிலிருந்தே உலகத்தை இயக்குகிறவர்கள். குகைகள் ஒரிடத்தில் இருப்பதைப் புறத் தளவில் கண்டு சும்மா சோம்பேறிகளாக இருக்கிறார்கள் என்று சொல்வது தவறு. அத்தகைய சான்றோர்களால் தான் உலகம் இயங்குகின்றது. மோனத்தவத்தால் தியானச் சிறப்பால் மேன்மையடையும் நாடு நமது பாரதநாடு. நமது பெருமான் வடக்கே இமயச்சிகரத்திலிருந்து தவம்புரிகின்றான். தெற்கே கன்னியாகுமரியில் அன்னை தவமியற்றுகிறாள். நமது பாரத மக்களின் தாயும் தந்தையும் அமைதியாயிருந்து தவமியற்று வதால் தான் நம் நாட்டிலும் மறைஞானசம்பந்தரைப் போன்ற மகான்கள் பலர் தோன்றிச் சிறப்பித்துள்ளனர் என்று தலைவர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்கள்.

பிள்ளையார் என்றுல் விநாயகராகிய பெரிய பிள்ளையாரையும், முருகனுகிய இளைய பிள்ளையாரையும், திருஞானசம்பந்தராகிய ஆளுடைய பிள்ளையாரையும் சண்டீசராகிய சேய்ஞலூர்ப் பிள்ளையாரையும் குறிக்கும் புலியூர் என்பது பலவாயினும் அவற்றை வேறு பிரித்துக் காண்பதற்குச் சிதம்பரத்தைப் பேரும் பற்றப்புலியூர் என்றும், மற்ற தலங்களை ஓமாம்புலியூர், எருக்கத்தம் புலியூர் என்றும் கூறுவர். அவற்றைப்போல ஞான சம்பந்தர் முவர். அவர்களை வேறு பிரித்துக் காண்பதற்கு சமயாசாரியராகிய காழிப் பிள்ளையைத் திருஞானசம்பந்தர் என்றும், சந்தானகுரவருள் ஒருவரும் இன்றைய விழாவிற்கு உரியவருமாகியவரை மறைஞானசம்பந்தர் என்றும், தருமையாதீன முதல்வரைக் குருஞானசம்பந்தர் என்றும் கூறுவது வழக்கம். பெரியவர்களைப்பற்றி நாம் நினைப்பதாலும் வழிபடுவதாலும் நாம் உயர்வடைய முடியும் என்றும் திரு. முருகவேள் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்கள். நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு. பி. சுவாமிநாதன் கடவுள் வணக்கமும் வாழ்த்தும் பாடினர். ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினர்கள்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam
Vaithiswarankoil.

I have great pleasure to record that the temple premises are neatly & cleanly kept. Archakàs perform Puja & Archanas with real piety and devotion. The management of the temple seems to be excellent & efficient. Let other Devasthanams copy the performance of the Pujas, Archanas etc. Worshippers really find that they are nearing the God, when they are in the temple premises. Let Hindu Dharma Succeed.

(Sd.) M. Krishna Prasad.
17—4—60.

Principal Subordinate Judge,
South Arcot-District, Cuddaloor.

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. கே. முத்துஜோதிடர் அவர்கள்.
திருவிடைமருதூர்.

(சார்வரிஷ புரட்டாசிமீ 1ஷ முதல் 31ஷ முடிய)
(16—9—60 முதல் 16—10—60 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

அசுவதி 1, 2 பாதங்கள் சுபமாகவும், தொழில் விருத்தி யோடும் நடக்கும். 3, 4 பாதங்களும், பரணி முதல்பாதமும் விசேஷ கன்மைகளைத் தரும். இல்லற சுகபோகங்கள், கிரய விக்கிரய லாபங்கள் ஏற்படச்செய்யும். 2, 3, 4 பாதங்களும். காத்திகை முதல் பாதமும் சுபமிராது. ஆரோக்கியக் குறைவு, பேருந்தன்மைக்குக் குறைவு; சில்லரை சச்சரவுகள் ஏற்படச் செய்யும். புதன் சனி சுபமாகும்.

2. விருஷபம். கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சமாய் நடக்கும். ஸ்வல்ப நஷ்டங்களும், காரிய விக்னங்களும், ஆரோக்கியக் குறைவும் உண்டுபண்ணும். மத்தியில் சில சுப சமாசாரவரத்தும் ஏற் படும். புதன், வியாழன் சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் ½. திருவாதிரை - புனர்பூசம் ¾

மிருகசீர்ஷம் 3, 4 பாதங்களும், திருவாதிரை 3, 4 பாதங் களும் சுப சந்தோஷத்தைத் தரும். உத்தியோக லாபம் ஏற் படும். ஆரோக்கியம் உண்டாகும். குடும்பம் ஓங்கும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் மிச்சிரமாய் நடக்கும். எதிலும் நஷ்டம் காட்டும். மனம் ஒருநிலையில் இராது. புதன், வெள்ளி சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் சுபமாகும். அசாத்தியமெல்லாம் சுலபசாத்தியமாகும். எங்கும் கீர்த்தியும், உபகாரத்தன்மையும் ஏற்படச்செய்யும். தெய்வபலம் ஓங்கும். வெள்ளி, சனி சுபம்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மகம் 4 பாதங்களும் உத்தியோக உயர்வைத் தரும். சுப சமாசாரங்கள் தரும். நல்லோர், பெரியோர அன்பும் கிடைக்கச் செய்யும். பூரம் 4 பாதங்களும், உத்திரம் முதல் பாதமும் செய்காரியங்கள் தவக்கமும் வீண் அலைச்சலும், சில்லரை மனஸ்தாபங்களும் உண்டுபண்ணும். மனம் சாந்தியாய் இராது. வியாழன் வெள்ளி சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

உத்திரம் 2, 3, 4 பாதங்கள் அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமாகக் காட்டும். கிரயவிக்ரய சௌகரியங்களும், லாபமும் உண்டுபண்ணும். ஹஸ்தம் 4 பாதங்களும் சஞ்சார பலன் களையும், தெய்விக சக்தியையும் ஈதிபாதா நிவாரணங்களையும் தந்து உலக பிரசித்தியையும், தெய்விகத் தோற்றத்தையும் தரும். மத்திமில் சிற்சில குழப்பங்கள் உண்டாகி விலகும். சித்திரை 1 2 பாதங்கள் மிச்ரமாய் நடக்கும். குடும்ப சுகம் ஏற்படச் செய்யும். வெகுகாலமாய் எதிர்பார்த்து நடவாமல் இருந்த காரியமெல்லாம் சாதிக்கச்செய்யும். சனி, ஞாயிறு சுபம்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$.

சித்திரை 3, 4 பாதங்கள் கஷ்ட நஷ்டங்களைக் காட்டும். சதா வீண் சஞ்சாரங்களை உண்டுபண்ணும். சுவாதி 4 பாதங் களும், விசாகம் 1, 2, 3 பாதங்களும் சுபமாகும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். உலகப்பிரசித்தியும், நல்லோர் பெரியோர் சேர்க்கையும், நஷ்ட தனவரத்தும் ஏற்படச் செய்யும். கடன் நீங்கிச் சுபம் உண்டாகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை.

விசாகம் 4ம் பாதமும் அனுஷம் 4 பாதங்களும் மிச்ரமாய் நடக்கும். வரவுக்கு மீஞ்சின செலவும், வீண் அலைச்சல்களும் உண்டாகும். கேட்டை 4 பாதங்களும் குடும்ப சுகமும், ஆரோக்கியமும் உண்டுபண்ணும். உத்தியோக உயர்வும், ஸ்திரவாசமும் ஏற்படச் செய்யும். வெள்ளி, சனி சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்ரமாகவே நடக்கும். எந்தக் காரியங்களும் தவக்கத்தோடு பூர்த்தியாகும். அதிக செலவுகள்

ஏற்படச் செய்யும். மேலோர் பேரியோர் அன்பு கிட்டும். ஆரோக்கியம் தரும். வேள்ளி, ஞாயிறு சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் ¾, திருவோணம் - அவிட்டம் ½

உத்திராடம் 2, 3, 4 பாதங்கள் சஞ்சார பலனையும், வரவுக்கு மிஞ்சிய செலவுகளையும், காரியதாமதத்தையும் உண்டு பண்ணும். திருவோணம் 4 பாதங்களும், அவிட்டம் 1, 2 பாதங்களும் உத்தியோக உயர்வையும், கீர்த்தி பத்திரப் பிராப்தியையும், தெய்வானுகூலத்தையும், குடும்ப சுகத்தையும் தரும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். மனம் சந்தோஷம் அடையும். சனி, செவ்வாய் சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் ½, சதயம் - பூரட்டாதி ¼

அவிட்டம் 3, 4 பாதங்கள் சுபமாகும். புத்திரோத்சவாதி சந்தோஷங்களையும், ஆரோக்கியத்தையும் தரும். சதயம் 4 பாதங்களும் மிச்ரமாய் நடக்கும். அதிகத் தொல்லைகள் உண்டுபண்ணும். பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள் ஆரோக்கியத்தைத் தரும். குடும்ப சுகம் ஓங்கும். தனதான்யப்பேருக்கு ஏற்படச்செய்யும். புத்திராதிகளால் சுகம் உண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ¼, உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் சுப சந்தோஷங்களைத் தரும். குடும்பம் ஓங்கும். உத்தியோக லாபம் ஏற்படும். உயர் பதவிகளும், மேலோர் பேரியோர் அன்பும் கிடைக்கச் செய்யும். ஆரோக்கியம் உண்டாகும். தெய்வபலம் பிரகாசிக்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

குறிப்பு:- இம்மாதத்தில் உலகம் சாதுக்கள், அடியார்கள், பேரியோர்கள் முதலியவர்களால் ரக்ஷிக்கப்படும். ஆஸேது ஹிமாசல பர்யந்தம் இயற்கை சரியில்லாமல் மிகுந்த பயத்தை உண்டுபண்ணும். மகாஜனங்கள் நாஸ்தீகத்தை விட்டு எல்லாஸ்வரூபங்களையும் கடவுளாக நம்பி, அவர்கள் செய்யவேண்டிய கடமைகளை ரோம்பவும் சிரத்தையுடன் செய்துகொண்டு சகலத்தையும் இறைவனிடத்தில் ஒப்புவித்து உலக க்ஷேமத்திற்குப் பிரார்த்தனைசெய்ய மங்களம் உண்டாகும். ஒவ்வோரு சிவாலயங்களிலும் விச்சித்தி இல்லாமல் தீர்தவஸோர்தாரையும், நந்திக்கு திவ்யாபிஷேகங்களும் செய்துவர, நலம். கடவுள் காப்பாராக.

சென்னை, தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தின்

மாதாந்தர வழிபாட்டுக் கூட்டம்

4—9—60 காலை மாலை இருவேளைகளிலும் காஞ்சிஏகம்பரர் கோயில், திருநெறிக்காரைக்காடு, திருமேற்றளி, கச்சிஅநேக தங்காவதம், கயிலாசநாதர்கோயில், ஒணகாந்தன்தளி, காமாக்ஷி யம்மைகோயில், குமரகோட்டம் ஆகிய கோயில்களில் வழிபாடு நிகழ்ந்தது. சென்னையிலிருந்தும் சுற்றுப்புறத்திலிருந்தும் ஏராளமான பக்தர்கள் விழாவில் கலந்து சிறப்பித்தார்கள். குமரகோட்டத்தில் சமயப் பிரசாரக் கூட்டம் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபேற்றது.

அடுத்தமாதம் 2—10—60 அன்று மாலை 3 மணி முதல் வழிபாட்டுக்கூட்டம் காஞ்சியை அடுத்துள்ளகுரங்கணில்முட்டம், திருமாகறல் என்ற இரு தலங்களிலும் நடைபேறும்.

ஐம்பெருங்காப்பியம்

தமிழ்மறை இசைமணி,

திரு. க. சொக்கலிங்க ஓதுவாமூர்த்திகள், வைத்தீஸ்வரன்கோயில்

இராகம் - ஸரஸ்வதி] [தாளம் - ஆதி

பல்லவி

சேந்தமிழ்ச் சேல்வி வந்தாள் — திகழும்
சிந்தாமணி தரும் சேவ்வோளிகோண்டு (சேந்)

அநுபல்லவி

கந்தங்கமழ்மணி மேகலை மேய்யுடுத்துக்
கைவளைகுண்டலமும் காற்சிலம்பும் ஒலிக்கச் (சேந்)

சரணம்

வந்தவழியில்திரு வள்ளுவர்குறள் கண்டாள்
வளமிகும் அச்சோலையில் வாழமனங்கோண்டாள்
அந்தநிலையில் வாழ்ந்த அருமைத்தமிழரசி
அரியமுவர் பாவால் அருளுருவாய்த்திகழ்ந்தாள் (சேந்)

முக்கண்ணன் முருகன் முன்னுள்தனில்கண்டு
மொழிபொருள் அன்பின்ஐந் திணையெனும்நூல்கோண்டு
திக்குளட்டும் வேற்றிதிகழப் புகழ்கோண்டிந்தத்
தேசமேங்கும் தனதுவாசங் கமழ்வதற்கே (சேந்)

தருமை ஆதீனம் ஆவணிமூலத் திருநாளில்

" செந்தமிழ்ச் சேம்மல் " என்ற பட்டம்பெற்ற
தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி முதல்வர், பேராசிரியர்
திரு. அ. சீனிவாசராகவன் M. A., அவர்கள் சோற்பெருக்காற்றுதல்.

வலதுபக்கம்: விழாவிற்குத் திரளாக வந்திருந்த கூட்டத்தினரின்
ஒரு பகுதி.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram) 10—9—60.